Registered as a News paper in Ceylon  விலை சதம் 15 ★ ★

ஈழநாடு
EELANADU
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 20
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் மாசி 19 ஜுஹஜ்: 12 ஞாயிற்றுக்கிழமை [2-3-69]

# மாநகரசபை சட்டங்கள் திருத்துவது பற்றி ஆலோசனை

விற்பனையாகிறது!
மலர்விழி தனிப்பிரதி 40 சதம்
சிறந்த குடும்ப வார இதழ்
குடும்பத்திலுள்ள அனைவருக்கும் வேண்டிய சிறுகதை - சிறுவர்பகுதி-பெண்கள் பகுதி-சிரிப்பு காட்டூன் - நாட்டு வைத்தியம் - சமையல்பகுதி- வாழ்க்கை ரகசியம்
1968-படஉலக விமர்சனம் இன்னும் பல.
K.R. விஜயாவின் பல வர்ண முகப்பு படத்துடன் வெளியாகியுள்ளது.
தமிழ்ப்பண்ணை புத்தகநிலையம்
193-K. K. S. ரோட் – யாழ்ப்பாணம்
கிளை: 19- பஸ்நிலையம் - யாழ்ப்பாணம்.

மணம், குணம், சுவை நிறைந்தது
அண்ணா கோப்பி

எமது கோப்பி லேபலைப் போல் போலி லேபல் தயாரித்து போலி கோப்பிகளை விற்பனைசெய்கின்றனர் போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.
அண்ணா இண்டஸ்ரி, இணுவில்.

## கொழும்பில்மேயர்கள் இன்று கூடுகிறார்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
மாநகரசபை கட்டளைச் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டும் என்பது பற்றி ஆலோசனை செய்ய இன்று காலை கொழும்பில் மேயர்கள் மகாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது. இம் மகாநாட்டை கொழும்பு மேயர் ஜனாப் ஜபீர் ஏ. காதர் கூட்டியுள்ளார்.

இம் மகாநாட்டில் இலங்கையிலுள்ள சகல மேயர்கள் உதவி மேயர்கள் கமிஷனர்களும் கலந்து கொள்வார்கள்,

யாழ்ப்பாணம் மேயர் திரு. எஸ். நாகராசா உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம், கமிஷனர் திரு. ஏ. ரி. சுந்தரம் ஆகியோர் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு நேற்று மாலை கொழும்பு சென்றுள்ளனர்.

மாநகரசபை சம்பந்தப்பட்ட மற்றும் விஷயங்கள் பற்றியும் இம் மகாநாட்டில் கலந்தாலோசிக்கப்படுமென தெரியவருகிறது.

## இடதுசாரிகள் பகிஸ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
வடபகுதியில் நடைபெற்று வரும் அறிஞர் அண்ணாவின் அனுதாபக் கூட்டங்களை இடதுசாரி கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் தற்பொழுது பகிஷ்கரித்துவருகின்றனர்.

அனுதாபக் கூட்டங்கள் பலவற்றில் பேசிவந்த கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ஒருவர், தலைமைப்பீடத்தின் உத்தரவை தொடர்ந்து கூட்ட அழைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற போதிலும், கூட்டங்களில் சமுகமளிக்க தவறுகின்றதாக தெரியவருகிறது.

அண்ணாவின் அனுதாபக் கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாதென சமசமாஜக் கட்சியின் தலைமைப்பீடமும் வடபகுதியிலுள்ள சமசமாஜ கட்சிப் பிரமுகர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாக தெரியவருகிறது.

(குரு. நிரு)

# கடன் வழங்குவதை மக்கள் வங்கி தற்காலிகமாக நிறுத்தியது

## விவசாயம், தொழில் துறைக்கு விதிவிலக்கு

கொழும்பு, ஞாயிறு
**தனிப்பட்டவர்களுக்கான கடன்கள் வழங்குவதை மக்கள்வங்கி தற்காலிகமாக நிறுத்திக்கொண்டுள்ளது.**
**நேற்றிலிருந்து கடன் வழங்குவதில்லையென்று எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த முடிவு ஜூலைமாதம் முதலாம் திகதிவரை நீடிக்கும்.**

பணம் புழக்கத்திலில்லாததாலேயே இந்த கடன் வழங்கும் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஜூலை 1-ம் திகதிக்குப் பிறகு தனிப்பட்டவர்களுக்கான கடன் வழங்கும் திட்டம் மீண்டும் அமுலுக்கு வரும்.

ஏற்கனவே கடனுக்கு விண்ணப்பித்து, கடன் வழங்குவதற்கு சிபார்சு ஆனவர்கள் இது ... பெற்றுக்கொ... அவர்களுக்கும் ஜூலை 1-ம் திகதிக்குப் பிறகே கடன் வழங்கப்படுமெனவும் அறியப்படுகிறது.

விவசாயம், தொழில்துறை ஆகியவற்றுக்கு கடன்உதவி வழங்கப்படும். ஆனால் இவைகள் தகுந்த பரிசீலனையின் பிறகே கடன் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கியும் கடன் வழங்கும் திட்டத்தில் சில ... செய்துள்...

## ‘சியவச சுவீப் விற்பனை மாணவர்களைப் பாதிக்கும்’

### எதிர்ப்புக் குழுவின் திர்மானம்

அளவெட்டி, சனி
‘பகிரங்க கண்டனக் கூட்டங்கள் நடத்திமேலும் நடக்கவிருக்கும் சியவச சீட்டிழுப்புகளை வாபஸ் பெறச் செய்யவேண்டும்’ என அகில இலங்கையில் உள்ள பெற்றோர் ஆசிரியர்களை கோரும் தீர்மானமொன்றை யாழ். சியவச எதிர்ப்புக்குழு நிறைவேற்ற இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் கூட்டத்தில் நிறைவேற்ற இருக்கும் மற்றும் தீர்மானங்களும் பின்வருமாறு:

பெற்றோரும் பொது மக்களும் குழுமியுள்ள இக் கூட்டம் கல்வியமைச்சரின் சியவச என்னும் அதிஷ்டலாபச் சீட்டுக்களை பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கூடாக மாணவர்களுக்கும் பலவந்தமாக திணிப்பதை வன்மையாக ...

கல்வி அமைச்சரின் இத்திட்டம் பொதுமக்கள் அறியக்கூடிய வகையில் நோக்கங்கள் விவரிக்கப்படாததால் இது வெறுக்கத்தக்கதாக இருக்கிறது. ஆனல் தகுதியான ஒரு நோக்கத்துக்கு பணம் தேவைப்படின் அத்தகைய பணத்தை விரும்பி தருபவர்களிடமிருந்து பள்ளிக்கூடங்கள் மூலம் சேர்ப்பதற்கு மறுப்பில்லை.

## கல்வி இலகா நடவடிக்கை

குரும்பசிட்டி, ஞாயிறு
பலாலி அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அதிபர் விரிவுரையாளர்களுக்கு விடுதிகள் நிறுவிக் கொடுக்க கல்வி அமைச்சு நடவ...

## அமைச்சரின் அந்தரங்க காரியதரிசிக்கு அபராதம்

பம்பலப்பிட்டி, சனி
அமைச்சர் ஒருவரின் அந்தரங்க காரியதரிசி ஒருவர் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த சில பொருள்களுக்கான விபரத்தை சுங்கப்பகுதியினருக்குத் தெரியாது மறைத்துக் கொண்டுவர முயன்ற குற்றத்துக்காக அவருக்கு சுங்கப்பகுதியின...

## வண்ணார் பண்ணை கொலை வழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
வண்ணார்பண்ணை கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் வயிரவநாதர் மதியாபரணத்தை கொலை செய்ததாக ஆறுமுகம் பத்மநாதன் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இக்கொலைக்கு பாவிக்கப்பட்ட கத்தியை மறைத்து வைத்திருந்ததாக சண்முகநாதன் என்பவர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கும், இம்மாதம் 4-ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

## ஆசிரியர்கள் பற்றாக்குறை

பொலிசாருக்கு உத்தரவு

## ‘பொதுத்தேர்தலுக்கு தயாராகுங்கள்’

கொழும்பு, ஞாயிறு
அடுத்த பொதுத் தேர்தலுக்குதயாராகும்படிநாட்டிலுள்ள சகல பொலிசாரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்திலிருந்து நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இதுசம்பந்தமான உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான சகல பாதுபாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி சகல பொலிஸ் நிலையங்களும் கேட்கப்பட்டுள்ளன.

எல்லாடிபியூட்டி பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் தமக்குக் கீழ் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் விஜயம் செய்து நேரடியாகவும் அடுத்த பொதுத் தேர்தல் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்குவார்.

கிழக்கு ஜெர்மன்பாதை

## 2 மணிநேரம் மூடப்பட்டது

ஸான் மார்ச் 1
மேற்கு ஜெர்மனிக்கும் பெர்லினுக்குமிடையே உள்ள கிழக்கு ஜெர்மன் பாதையை கிழக்கு ஜெர்மனி இன்று இரண்டு மணித்தியாலயங்கள் மூடிவைத்தது. மேற்குப் பேர்லினிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு ஆயுதங்கள் கடத்தப்...

## சைக்கிளுடன் கைது

இமையாணன், சனி
வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரும் பொது மக்களும் குழுமியுள்ள இக் கூட்டம் கல்வியமைச்சரின் சியவச என்னும் அதிஷ்டலாபச் சீட்டுக்களை பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கூடாக மாணவர்களுக்கும் பலவந்தமாக திணிப்பதை வன்மையாக கண்டிப்பதுடன் இது தார்மீக முறையற்ற செயல் ஆகையாலும் பாடசாலை மாணவரது கல்வி' அறிவு, ஒழுக்கம் முதலியவற்றை பாதிப்பதாலும் கல்விப் பகுதியினரின் இம் முயற்சியை கண்டிக்கிறது.

## நடவடிக்கை

குடும்பசிட்டி, ஞாயிறு

பலாலி அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அதிபர் விரிவுரையாளர்களுக்கு விடுதிகள் நிறுவிக் கொடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்பொருட்டு கல்லூரி எல்லையில் உள்ள தெரு பொதுமக்களின் பாவனைக்கு மூடப்பட்டுள்ளது. இத் தெருவை உபயோகிக்கமக்கள் விடுத்த கோரிக்கையை கல்வி இலாகா நிராகரித்துள்ளது.

அமைச்சர் ஒருவரின் அந்தரங்க காரியதரிசி ஒருவர் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த சில பொருள்களுக்கான விபரத்தை சுங்கப்பகுதியினருக்குத் தெரியாது மறைத்துக் கொண்டுவர முயன்ற குற்றத்துக்காக அவருக்கு சுங்கப்பகுதியினரால் ரூபா 9,100 அபராதம் விதிக்கப்பட்டது.

சென்றமாத இறுதியில் பாரதத்திலிருந்து திரும்பிய அமைச்சர் குழுவில் இவரும் இருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

திட்டம் மீண்டும் அமுலுக்கு வரும்.

ஏற்கனவே கடனுக்கு விண்ணப்பித்து, கடன் வழங்குவதற்கு சிபார்சுஆனவர்கள் இதுவரை கடனைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் பிறகே கடன் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கியும் கடன் வழங்கும் திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்துள்ளது.

# ''நோயை மறைப்பது பயங்கரமானது''

உடுப்பராய், சனி

''நமது உடல்நிலை சிறப்பாகஇருந்தால்தான்நாங்கள் உலகில் சந்தோஷமாக வாழலாம். நமக்கு வரும் நோய்களுக்குள் மிகவும் கொடியது புற்றுநோய். புற்றுநோய் என்று தகுதிவாய்ந்த வைத்தியர்கள் கூறியபின்னரும் கூட சிலர் இந்நோயை மறைத்துவைக்கப் பார்க்கின்றனர். இந்தநிலை மிகவும் பயங்கரமானது.''

உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு கூட்டத்தில் புற்றுநோய் தடுப்பியக்க ஆதரவில் பேசிய முன்னாள் சுகாதாரசேவை அதிகாரி டாக்டர் க. சிவஞானரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. சு. குமாரகேசரம் கூட்டத்துக்கு தலைமை தாங்கிக் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தார்.

டாக்டர் திரு. சிவஞானரத்தினம் தொடர்ந்து பேசுகையில் ''புற்றுநோய் கண்ட ஒருவருக்கு ஏற்ற சிகிச்சை மின்சாரமூலம் நோயைக் குறைத்தலும் சத்திரசிகிச்சைசெய்தலுமேயாகும். எங்களில் யாருக்கேனும் அவ்வாறு காத்திராப்பிரகாரம் புற்றுநோய் ஏற்பட்டுவிட்டால் மேலே குறிப்பிட்ட சிகிச்சைமுறைகளைப் பயப்படாமற் கையாளவேண்டும'' என்று குறிப்பிட்டார்.

மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கும், இம்மாதம் 4-ம் தேதிக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது.

## ஆசிரியர்கள் பற்றுக்குறை

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள ஹாட்லிக் கல்லூரி, புலோலி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றுக் குறை நிலவுகிறது.

மேற்கு ஜெர்மனிக்கும் பெர்லினுக்குமிடையே உள்ள கிழக்கு ஜெர்மன் பாதையை கிழக்கு வஜர்மனி இன்று இரண்டு மணித்தியாலயங்கள் மூடிவைத்தது. மேற்குப் பேர்லினிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாக குற்றம்சாட்டிய கிழக்கு ஜெர்மனி போக்குவரத்துக்கு புதிய கட்டுப்பாடுகளை ஏற்கனவே விதித்திருந்தது.

(விபரம் முன்றும்பக்கத்தில்)

குறித்து விளக்குவார்.

## சைக்கிளுடன் கைது

இமையாணன், சனி

வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒரு வாலிபரை சந்தேகத்தின் பேரில் பொலிசார் துரத்திப்பிடித்தபோது அவரிடமிருந்து கடத்தல்செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட 7 விலையுயர்ந்த சேலைகளைக் கைப்பற்றினர்.

# பழம் பெருமை பேசுவதோடு மட்டும் நிற்காதீர்

## கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர் மத்தியில் உபசபாநாயகர்

சங்கானை, சனி

பழம்பெருமைகளைப் பேசுவதோடு மட்டும் திருப்தியடையாது, தமிழ்க்கலைகளை வளர்ப்பதற்கு ஆக்க பூர்வமான முறையில் சேவையாற்ற மாணவர்கள் திடசங்கற்பம் பூணவேண்டும். பத்திரிகைகள் அரசியல் வாதிகளுக்குமட்டும் முக்கியத்துவம் கொடுக்காது மற்றும் துறையில் உள்ள அறிஞர்களுக்கும் தொழிலாளிகட்கும் விவசாயிகட்கும் போதிய முக்கியத்துவம் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகப் பத்திரிகைக் கலைத்துறை மாணவர் மன்றத்தினரின் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறினர்.

இவ்விருந்து வைபவம் மன்றத்தின் தலைவரும், பத்திரிகைக்கலைத்துறை விரிவுரையாளருமான திரு. அ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இக்கனிஷ்ட பல்கலைக் கழக கல்லூரியில் கல்விபயிலும் பத்திரிகைக்கலைத் துறை மாணவர்கள் இரண்டு வருடப்பயிற்சி பெற்று வெளியேறிப் பத்திரிகைகளிலோ அல்லது மற்றும் பொது ஜனத் தொடர்புச் சாதனங்களிலோ வேலைபார்க்கும் போது பத்திரிகா தர்மத்திலிருந்து வழுவாது நேர்மையாக கடமையாற்றி நாட்டிற்குச் சேவையாற்ற வேண்டும். இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றேன்.

மன்றத்தின் சார்பில் செல்வி நிர்மலா நாகநாதன் நன்றியுரை வழங்குகையில் பட்டம் பெற்று வெளியேறும் இப்பல்கலைக் கழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடித் தருவதற்கு உபசபா நாயகரும் மற்றும் தமிழ்த்தலைவர்களும் உதவ வேண்டும் என்றார்.

# கிளிநொச்சி மக்கள்நிலை குறித்து எம். பி.

கிளிநொச்சி. சனி

''கிளிநொச்சித்தொகுதியிலுள்ள மக்கள் காணியின்மையாலும் வறுமையாலுமே முடிக்குரிய காணியில் குடியேறியுள்ளனர். இம்மக்களுக்கு காணிகொடுத்தல் நீதியும் நியாயமுமாகும். ஏழைமக்களுக்கு உங்களால் இதனை செய்யமுடியுமென நினைக்கிறேன்'' எனக் கிளிநொச்சி எம் பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வடமாகாண அரசாங்க அதிபருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளார்.

மேலும் இம்மகஜரில் திரு. இரத்தினம் தெரிவித்துள்ளதாவது: உங்களால் செய்யமுடியாதெனின் அதனைத் தெரிவித்தால் இதுகுறித்து நீர்ப்பாசன அமைச்சர் காணிப்பகுதி ஆணையாளர் ஆகியோரிடம் பேச வாய்ப்பிருக்கும்.

முடிக்குரிய காணிகளில் குடியேறிய ஏழைகளுக்கு குறைந்த அபராதத்தையே போடவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி எம். பி. சென்ற மாதம் 28-ம் திகதி 'ஈழநாடு' தலையங்கத்தையும் அரசாங்க மகஜருடன் இணைத்து அனுப்பியுள்ளார்.

## கிராமசபை தேர்தல்கள்

அல்லைப்பிட்டி, சனி

எழுவைதீவு, அனலைதீவு கிராமசபை தேர்தல்களுக்கான அபேட்சா பத்திரங்கள் இம்மாதம் 13-ம் திகதி குறிப்பிட்ட கிராமசபை அலுவலகங்களில் வைத்து ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. யாழ். மாவட்ட தேர்தல் அதிகாரியினல் அபேட்சா பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

# தமிழ்நாடு பட்ஜட்: புதிய வரி இல்லை

சென்னை, மார்ச். 1

'தமிழ்நாடு' அரசின் புதிய வரவுசெலவுத் திட்டத்தில் புதிதாகவரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. மதியழகன் இன்று கீழ் சட்டசபையில் புதிய வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்தார். 1969-70-ம் ஆண்டில் மாநிலத்தில் வருமானமாக ரூ. 268 கோடியே 60 லட்சம் எதிர்பார்ப்பதாகவும், செலவு ரூ. 285 கோடியே 37 லட்சம் என்றும்ரூ. 19கோடியே 5 லட்சம் துண்டுவிழும் தொகையாக கணிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. மதியழகன் அறிவித்தார். துண்டுவிழும் தொகையை ஈடுகட்டாமல் விட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

1969-70ம் ஆண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட்டை நிதிமந்திரி திரு. மதியழகன் இன்று சபையிலே வாசித்தார். சுமார் ஒரு மணிக்கும் அதிகமான நேரமாக இதுவாசிக்கப்பட்டது

இப்பட்ஜெட்டின் மூலம் புகுமுக வகுப்புவரை கல்வி கட்டணம் அறவிடுவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது. சுமார் 4 பள்ளிக் கூடங்கள் இந்த நிதியாண்டில் கட்டி முடிக்க படும்.

இப்பட்ஜெட்பற்றி பேசிய பிரஜாசோஷலிஸ் உறுப்பினர் திரு. எம். ஜி. கோரே நடுத்தர வகுப்பினருக்கும் சிறுவிவசாயிகளுக்கும் இந்தப் பட்ஜெட்டின் மூலம் எதுவித நன்மையும் கிடைக்கவில்லை. என்று குறிப்பிட்டார்.

## புலோலியில் திருட்டு

பருத்தித்துறை, சனி

புலோலி மேற்கில் கடந்த சில தினங்களாகப் பல வீடுகளில் துணிகள் பணம்நகைகள் ஆகியன திருடப்பட்டு வருகின்றன. இதுபற்றிப் பருத்தித்துறை பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

# சிரியாவில் ராணுவப் புரட்சி

டமாஸ்கஸ்மார்ச். 1

**சிரியாவில் திடீர் ராணுவப் புரட்சியொன்று நடைபெற்றுள்ளது, அந்த நாட்டின் பதுகாப்பு அமைச்சர் ஆட்சிப்பொறுப்பை கையேற்றிருக்கிருர்.**

**சிரியாவின் அதிபரும் பிரதம மந்திரியும் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.**

**டமாஸ்கஸ் தெருக்களில் ராணுவம் காவல் புரிந்து வருகின்றது.**

சிரியாவில் திடீர் புரட்சி ஏற்பட்டு பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்டு ஆட்சிப் பொறுப்பை ராணுவத்தினரின் ஆதரவுடன் மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிரியாவின் அதிபரும் பிரதமமந்திரியும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் டமாஸ்கஸ் தெருக்களிலும் அரசாங்க கட்டிடங்களிலும் ராணுவக் காவல் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிக்க ஜி.ஜி.திட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இராசயானம், தாவரசாஸ்திரம் ஆகிய பாடங்களில் சித்திபெற்ற வேலையற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தை இலங்கைவேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திற்கு தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரி ஆண்களுக்கு தேயிலைத்தோட்டங்களில் ஒரு வருடம் பயிற்சி அளித்து வேலைவாப்பளிக்கக் கூடிய வசதிகளைச் செய்து தரலாமென திரு. ஜி. ஜி. இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளை கிராமசபைகளில் காரியதரிசி போன்ற உயர்பதவிகளுக்கு நியமிக்குமாறு தாம் உள்ளூராட்சி அமைச்சர்திரு ஆர். பிரேமதாசாவிடம் கேட்டதாகவும் அது பற்றி பரிசீலனை செய்வதாக அமைச்சர் தெரிவித்ததாகவும் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தூதுகோஷ்டி இம்மாதம் 5ம் திகதி உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்காவைச்சந்தித்துவேலையற்ற பட்டதாரிகள் பிரச்னைபற்றி பேச்சுவார்தை நடாத்த விருப்பதாக சங்கத்தின் நிர்வாகிகளில் ஒருவரான திரு. ச. சதானந்தன் தெரிவித்தார்.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டாலர்
அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணையில் அடுத்தடுத்து துணிகரத் திருட்டு

## பொலிசார்ரோந்து சுற்றுவர்

அல்லைப்பிட்டி, சனி

வேலணை வங்களாவாடியில் உள்ள ஒரு கூட்டுறவுச் சங்கக்கடையில் அடுத்தடுத்து பலதடவைகள் களவுகள் நடைபெறுகின்றனவாம். சில தினங்களுக்கு முன்னரும் இந்தக்கடையில் ஓட்டைப்பிரித்து சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கள்வர்கள் களவாடிவிட்டனர். இதுசம்பந்தமாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் நடைபெற்று வரும் களவுகள் சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை. இதனுல் வீடுகளிலும் களவுகள் அதிகரிக்குமோவென இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். இங்குள்ள பல கடைகளிலும் திருடர்கள் தங்கள் கைவரிசைகளைக் காட்டாமல் இல்லை. இதனைத்தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிசார் வேலணையில் ரோந்து சுற்றும் கடமையில் ஈடுபடுவார்களெனத்தெரிகிறது.

# கல்லுண்டாய் உப்பளம் மூடப்படுமா?

அராலி, சனி

கல்லுண்டாய் உப்பளத்தைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது மூடுவதா என்பது பற்றி ஆராய்வதற்காக ஐவர் கொண்ட குழுவொன்றை வலி-மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் நியமித்துள்ளது. இந்த உப-குழு இது பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்.

340 ஏக்கர் விஸ்தீரணமுள்ள முடிக்குரிய காணியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உப்பளத்தில், 75 ஏக்கர் நிலம் உப்பு நீர் தேக்குவதற்கும், 215 ஏக்கர் நிலம் நீர் காய்ந்து சுருங்கவிடுவதற்கும், மிகுதி 50 ஏக்கரில் 30 ஏக்கர் மட்டுமே உப்பு விளைச்சலுக்கும் உபயோகிக்கப்படுகின்றன. உப்பு விளைச்சலுக்கு 30 ஏக்கரில் 15 ஏக்கர் நிலம் இதுவரை செப்பனிடப்படவில்லையாதலால் 15 ஏக்கர் நிலத்திலேயே உப்பு விளைவிக்கப்படுகிறது.

340 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்த உப்பளத்தில் 15 ஏக்கர் நிலத்திலேயே உப்பு விளைவிக்கப்படுவதாகவும், இதனுல் வருடாவருடம் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

வருடாவருடம் உப்பு உற்பத்திசெய்யும் நிலத்தை அதிகரிக்கச் செய்யாததினுலேயே இவ்வித நஷ்டம் ஏற்பட்டுவருவதாகவும் தொடர்ந்து நடத்துவதால் நன்மை உண்டா என்பது ஆராயவேண்டும் என்றும் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்க சமாசம் கருதுகின்றதாம்-

சமாசத் தலைவர் வை. இராசசுந்தரம், உப-தலை

# மண்டைதீவு கி. ச. முதலாவது கூட்டம்

அல்லைப்பிட்டி, சனி

மண்டைதீவு புதிய கிராமசபையின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றபோது கூட்டத்தைப்பார்ப்பதற்கு பொது மக்கள் திரண்டிருந்தனர். இக்கிராமசபைக்கு ஒரு தற்காலிக குமாஸ்தா தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற பிரேரணை ஒத்தி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்த மண்டைதீவு உபதபால் நிலைய தந்தி சேவகர் விடய அங்கத்தவர்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பை சமாளிக்க முடியாத நிலையில் கைவிடப்பட்டது.

4ம் வட்டார உறுப்பினர். திரு. செ. பேணுட்டியுல் கொண்டுவரப்பட்டு 1-ம் வட்டார உறுப்பினர் திரு பொ. திருநாமத்தர்ல் அனுமதிக்கப்பட்ட கொட்டடி விஷகடி வைத்தியர் திரு. சிற்றம்பலத்தின் மாற்றத்தை ரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சிரமதானம் மூலம் வீதி திருத்தம்

குரும்பசிட்டி, சனி

ஏழாலை கோவில் வீதி சிரமதான மூலம் கிராம அபிவிருத்தி இலாகாவினுல் செப்பனிடப்படவிருக்கின்றது.

# சிறையும் அபராதமும்

சாவகச்சேரி, சனி

தோட்டத்திலிருந்து வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த ஒருவரை வழிமறித்து கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு மூன்று மாதக்கடுங்காவல் சிறைத்தண்டனையும் 250 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி மீசாலை வடக்கைச்சேர்ந்த விஞசித்தம்பி வேலுப்பிள்ளை என்பவரை அதே ஊரைச்சேர்ந்த லொறிச்சாரதியான அருளையா என்பவர் கத்தியால் வெட்டிப்படுகாயப்படுத்தியதாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட இவ்வழக்கை விசாரணைசெய்த சாவகச்சேர் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மூன்றுமாதக் கடுங்காவல் சிறைத்தண்டனையும் ரூபா 250 அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார். அபராதம் கட்டத்தவறினுல் மேலும் 6 வாரச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் குற்றப்பணத்தைக் கட்டினுல் தாக்கப்பட்ட வேலுப்பிள்ளைக்கு 150 ரூபா கொடுக்கப்படவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

வழக்காளிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பி. மயில்வாகனம் வழக்கை நடாத்தினுர். எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. கனகசபையின் அனுசரணையுடன் அட்வகேட் திரு. கே. ஜெயக்கொடி ஆஜரானுர்.

# தீவைப்பு வழக்கில் தீர்ப்பு

சாவகச்சேரி, சனி

சென்றவருடம் ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி அல்லாரை வாசியான மாணிக்கம் பெண் தெய்வானையின் வீட்டுக்குத் தீயிட்டுச்சேதம் விளைவித்ததாக அதே ஊர் வாசியன பொன்னன் தங்கராசா என்பவா மீது குற்றம் சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு எதிரிக்கு 350 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். பணத்தைக் கட்டத் தவறின் 6வாரச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார். குற்றப்பணம்

மட்டுவில்

# பன்றித்தலைச்சி அம்மன்கோவிலில் 17-ம் திகதி ஆலயப்பிரவேசம்

## வெகுஜன இயக்க கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 17ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் உற்சவத்தின்போது ஆலயப்பிரவேசம் நடத்துவதென்று நேற்றுக்கூடிய வெகுஜன தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தீர்க்கமாக முடிவு செய்துள்ளது. ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம் ஆகியன சம்பந்தமாக பிரமுகர்கள் பலரதும் ஆலோசனையைக் கேட்பதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு திரு. எஸ். நாகரத்தினம் தலைமைவகித்துப் பேசுகையில் கடந்த இரண்டரை வருடங்களாக சிறுபான்மைத் தமிழ்மக்கள் தீண்டாமையால் அனுபவித்துவரும் கஷ்டங்கள் சொல்லும் தரமல்லவென்றும் 17ம் திகதி மட்டுவிலில் அமைதியான முறையில் ஆலயப்பிரவேசம் நடாத்தும்போது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டால் தாங்களும் பலாத்காரம் பிரயோகிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும்கூறிஞர்.

இந்துமாமன்றத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் எஸ். பொன்னையா பேசியதாவது: சாதியின் பெயரைச் சொல்லி இனியும் ஆலயங்களில் பகுபாடு காட்டக்கூடாது. இதற்கு தற்போதுள்ள சட்டம் போதாது என்பதை நான் பலதடவை வலியுறுத்தியுள்ளேன். சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தின் பலத்தை தேசவழமைச் சட்டம் பலவீனப்படுத்துவதாக இருந்தால், தேசவழமைச்சட்டத்தின் 4ம் ஷரத்தை நீக்குவதோடு, சமூகஏற்றத்தாழ்வுச் சட்டத்தையும் வலுவுள்ளதாக மாற்ற மேலும் சில விதிகளைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிலவிவந்த பழக்கத்தை உடனடியாக மாற்றுவது கஷ்டம்தான். என்றுலும் அதை மாற்றியே தீர்க்கவும் வேண்டியிருக்கின்றது.

முன்னுள் வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பேசியதாவது:

இந்தியாவில் சிதம்பரம் ...மமே இல்லை. இதுவரை எந்த நீதிமன்றமும் சட்டம் பலவீனமானதென்று தீர்க்கவில்லை. எனவே போதிய வழக்குகள் வைத்து வாதாடுவதன் மூலம் இப்பிரச்னைகளைத் தீர்க்க முடியும். இதற்கு எனது இலவச உதவி என்றுமுண்டு.

மாவை ஆலய சுந்தரலிங்கம் அப்பீல் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரே சட்டத்தில் பலவீனம் உண்டா, இல்லையா என்பது தெரியவரும். எனவே பலாத்காரத்தை விட்டு, சட்டத்தை அனுசரித்து, வழக்குகள் நடாத்துவதால் பிரச்னைகளைத் தீர்ப்போம்.

முக்கியமாக சைவர் அல்லாதவர்கள் ஆலயப்பிரவேச பிரச்னையில் அங்கம் வகிக்கக் கூடாது.

திரு. மு. வயிரமுத்து பேசியதாவது: மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் திறந்து விடப்பட்டு மாதக் கணக்காகி விட்டது. ஆனுல் அங்குள்ள சுமார் 150 குடிகளும்அங்கு போகப் பின்வாங்குகிருர்கள். இதற்கு பிரச்சாரம் அவசியம் கோவில்கள் ஒருபோதும் மனம் ஒத்துத் திறக்கப்படமாட்டாது. பிரச்சாரம் மூலம், வழக்குகள் நடத்துவது மூலமூம் இது சுலபமாக நடைமுறைக்கு வரும்.

திரு. வி. என். நவரத்தினம் எம். பி. பேசியதாவது: ஆலயப்பிரவேச பிரச்னையை சகல கட்சிகளும் சேர்ந்து சில வருடங்களுக்கு முன்னர் செய்தோம். ஆனுல் இன்று ஒருசில கட்சிகள் மட்டுமே இதனை முன்னின்று செய்கின்றன. எந்த பலாத்காரத்தையும் கைவிட்டு, சட்டத்தை அனுசரித்து, அமைதியான முறையில் ஆலயப் பிரவேசம் செய்ய சகல சைவர்களும் முன்வர வேண்டும்

சுமார் 25க்கும் மேற்பட்டவர்கள் இங்கு கலந்து கொண்டு ஆலோசனைகள் தெரிவித்தனர். (கா. நி)

# கோப்பாய் எம். பிக்கு பாராட்டு

அளவெட்டி, சனி

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை தீண்டாமை ஒழிப்புச்சட்டத்தை பலாத்கார மூலம் அமுல் நடத்தமுடியாது. அன்பு, உண்மை, அகிம்சை என்ற அடிப்படையில் அமுல்நடத்

14 ஆண்டுகளின் பின்

# யாழ். இந்து வென்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். இந்துக் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி 14 வருடங்களின் பின் மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

1955-ம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி ராஜரத்தினம் தலைமையில், சென். ஜோன்ஸ் கல்லூரியை வெற்றி பெற்றபின் இவ்வருடமே மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 72 ஓட்டங்களை பெற்றது. இதில் தெய்வேந்திரா 24 ஓட்டங்களைப் பெற்ருர். எஸ். கந்தையா, கே. அமலகுகன், இ. மித்தானந்தன், ஏ. விபுலானந்தன் முறையே 3, 2, 2, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஏ. இ. விஜயரட்ணம் 29 ஓட்டங்களையும், ரி. சற்குணசீலன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

எம். சுரேந்திரா, கே. சிவபாலன், யே. நவரட்ணராசா, டி. எஸ். மில்ஸ் முறையே 4, 2, 2, 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

சென். ஜோன்ஸ் 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 142 ஓட்டங்களைப் பெற்றது. சுரேந்திரா, தெய்வேந்திரா, நவரட்ணராசா முறையே 35, 27, 21 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ். கந்தையா 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் அமலகுகன், மித்தானந்தன் முறையே 2, 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். இந்துக் கல்லூரி 105 ஓட்டங்களைப் பெற்ருல், இப்போட்டியில் வெற்றி பெறலாம் என்ற நிலையில் 2-வது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்து ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 42 ஓட்டங்களைப் பெற்றபோதும், பின் மளமளவென 7 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன் பின் துடுப்பெடுத்தாடிய இரட்டையர்களான கெங்காதரனும், திலுக்குமாரும் மிகவும் நிதானமாய் தமது கோஷ்டியின் எண்ணிக்கையை 104 ஆக உயர்... விக்கெட் நஷ்டத்துக்கு 110 ஓட்டங்ளைப் பெற்று சென். ஜோன்ஸ் கல்லூரியை 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (தே. நி)

# கேள்விவிளம்பரம்

## உரும்பராய்--ஊரெழு பட்டினசபை

உரும்பராய் சிவன்காட்டு வயிரவ கோவிலில் இருந்து கரந்தன் வரைக்கும் கல்ருேட்டு அமைப்பதற்கு உரும்பராய் ஊரெழு பட்டினசபையால் கேள்விப்பத்திரங்கள் 16-3-69-ம் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபாய் 5000/-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களுக்கு 14-3-69-ம் திகதி பிற்பகல் 3-00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/-தும், கேள்விப்பணம் ரூபா 50/-தும் கட்டியதன் பேரில் பட்டினசபையினுல் கேள்விப் பத்திரம் வழங்கப்படும். பத்திரப் பணம் ரூபா 10/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டினசபை,
உரும்பிராய்—ஊரெழு.

பட்டினசபை அலுவலகம்,
உரும்பராய்-ஊரெழு,
உரும்பராய், 28-2-69.
1203

# கேள்வி விளம்பரம்

## கிராமசபை வட்டுக்கோட்டை

### வட்டார வேலைகளுக்கு கல்லு, மக்கி, மணல் விநியோகித்தல்

1969-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 25-ந்திகதி காலை 9-30 மணிவரை மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 24-3-69-ம் திகதி நண்பகல் 12-00மணி வரையும் ரூபா 25/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களை எனது கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

ச. நிற்சிங்கம்
தலைவர்
கிராமசபை,
வட்டுக்கோட்டை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
28-2-69. 1204

சுன்னுகம் பட்டினசபை

# வரிவிளம்பரம்

## தேவை

அனுபவமும் நன்நடத்தையும் உள்ள அச்சுக்கந்தோர் வேலைகள் தெரிந்த கொம்போசிட்டர்களும், மெசின்மைன்டர்களும் தேவை. ஆர்வம் உள்ள அச்சுக்கந்தோர் தொழில் பழகுவதற்கு வாலிபர்களும் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தமிழ் நாடு அச்சகம் அன் புத்தகசாலை, வட்டுக்கோட்டை. 536

பழரசம் விற்பதற்கு ஆண் பிள்ளைகள் அல்லது பெண் பிள்ளைகள் தேவை. காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நேரில் கீழ் இருக்கும் விலாசத்திற்கு வந்து காணவும். 24, கொன்வன்ட் வீதி, யாழ்ப்பாணம். 715

யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கப்படவிருக்கும் புதிய தியேட்டருக்கு எல்லாப் பதவிகளுக்கும் ஆட்கள் தேவை. தெரிந்தெடுப்பவர் பதவிக்கேற்ப பிணைப் பணம் கட்ட வேண்டும். 5-3-69க்கு முன்னர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 'விளம்பர இல. 719, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 719

## விற்பனைக்கு

வீடுவளவு 7 பரப்பு உடனடியாக விற்பனைக்கு உள்ளது. நேரடியாக விண்ணப்பிக்கவும். மெக்கானிக் நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை. வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை 721

காணி

சண்டிலிப்பாயிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்துக்கருகாமையில் பனைமரங்களடங்கிய 19 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை சம்பந்தமான விபரங்களுக்கு: திரு. யோகநாதன், 180, கண்டி வீதி, யாழ்ப்பாணம். என்பவருடன் தொடர்புகொள்ளவும். 706

காணி:

கோண்டாவில் கிழக்கு, பலாலி ருேட்டு 3-ம் மைல் கட்டைக்கருகாமையில் மும்மூன்று பரப்புகள் கொண்ட இரண்டு கட்டிடக் காணித் துண்டுகள். கிணற்றுத் தண்ணீர் மின்சார வசதிகள் உள்ளது. விபரங்களுக்கு: சிவரத்தினம், ஸ்ரேசன் ருேட்டு, கோண்டாவில். 714

# கர்ப்பிணிகள் கஷ்டம்

சுழிபுரம், சனி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுவருவதாகவும் தொடர்ந்து நடத்துவதால் நன்மை உண்டா என்பது ஆராயவேண்டும் என்றும் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்க சமாசம் கருதுகின்றதாம்-

சமாசத் தலைவர் வை. இராசசுந்தரம், உப-தலைவர் திரு. எஸ். கே. தருமலிங்கம், நிர்வாக உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். சின்னத்துரை, ரி. சண்முகதாசன், எஸ். கே. திருச்சிற்றம்பலம் ஆகியோர் கொண்ட உப-குழு இதுபற்றி ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும்.

## மூலம் வீதி திருத்தம்

குரும்பசிட்டி, சனி

ஏழாலை கோவில் வீதி சிரமதான மூலம் கிராம அபிவிருத்தி இலாகாவினால் செப்பனிடப்படவிருக்கின்றது. இதற்கான ஆரம்ப வேலைகள் இம் மாதம் 15-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. பீ. எல். பற்றிக் ஏழாலை தென்மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் உதவியுடன் இதற்கான ஒழுங்குகளை கவனித்து வருகின்றார்.

திரேட் திரு கே. விக்னராசா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு எதிரிக்கு 350 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். பணத்தைக் கட்டத் தவறின் 6வாரச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார். குற்றப்பணம் கட்டப்பட்டால் வீட்டுச் சொந்தக்காரி தெய்வானைக்கு 150ரூபாகொடுக்கப்பட வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

வழக்காளிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பி. மயில்வாகனம் சாவகச்சேரிப் பொலிசாரின் உதவியுடன் வழக்கை நடாத்தினார். எதிரிசார்பில் புறக்டர் வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் எஸ். நாகராசா ஆஜரானர்.

## வழக்கு தள்ளுபடி

அளவெட்டி, சனி

சூராவத்தை முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன கர்த்தாக்கள் மீது குற்றஞ்சாட்டி பரிபாலன சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் உட்பட நான்கு பேருக்கெதிராக, திரு. நாகமுத்து திருநாவுக்கரசு உட்பட ஆறு பேரால் தொடரப்பட்ட வழக்கொன்றை யாழ். மாவட்ட நீதிபதி தள்ளுபடி செய்தார்.

இவ் வழக்கை விசாரித்த யாழ். மேலதிக நீதிபதி ஜனப் இஸ்மயில் வழக்காளி தரப்பினர் தக்க ஆதாரங்கள் காட்டவில்லையெனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

## கராம்புடன் லொறி

அளவெட்டி, சனி

பருத்தித்துறை வீதியில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டபோது அதில் 11 மூடை கராம்பு இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. கடத்தலுக்குக் கொண்டு செல்லப்பட்டதெனச் சந்தேகிக்கப்பட்டு இதுசம்பந்தமாக நால்வரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

நெல்லியடியில் நேற்று நடைபெற்ற தேசிய சுவீப் இழுப்பு இடத்தில் கடமையாற்றுவதற்கு காங்கேசன் துறைப் பொலிசைச்சேர்ந்த குமாரசிங்க தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியே இவர்களைக் கைது செய்தது. கராம்பு மூடைகளும் லொறியும் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

றுவது கஷ்டம் தான். என்றாலும் அதை மாற்றியே தீர்க்கவும் வேண்டியிருக்கின்றது.

மூன்றாள் வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பேசியதாவது:

இந்தியாவில் சிதம்பரம் திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலும் பல கோவில்கள் திறக்கப்பட்டன. ஆனால் கிராமங்களிலுள்ள கோவில்கள் திறக்கப்படவில்லை. தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்போது இரு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். தேநீர்க்கடைப் பிரவேசம் வேறு. தேநீர்க்கடை தனிமனிதன் உரிமை. ஆலயப்பிரச்னை சமய விஷயம். கோவிலின் புனிதம் கெடாத வகையில் சைவர்கள் மட்டுமே இதில் கலந்து கொள்ள வேண்டும். ஆலயப் பிரவேசத்தில் இந்துக்கள் மட்டுமே கலந்து கொள்ளலாமென்று காந்தியே வெளிப்படையாகச் சொல்கின்றார். இதற்கு வீடுவீடாகச் சென்று ஆதரவு கேட்க வேண்டும். சைவசமய மக்கள் மட்டுமே இதுவிஷயத்தில் ஈடுபட்டால் இப்பிரச்னை சுலபமாகத்தீரும்.

திரு ஆ. விசாகரத்தினம் பேசியதாவது:- தீண்டாமையை ஒழிக்க 35 லட்சம் தமிழ் மக்களும் சாதி, சமய, அரசியல் வேறுபாடின்றி ஒன்றாகச் சேரவேண்டும். மிக மிகவலுக்குறைந்த சாதி ஒழிப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும். பகிரங்கப் பிரசாரக் கூட்டங்கள் மூலம் மக்கள் ஆதரவைப் பெற்று சுலபமாக இதைத் தீர்க்கலாம்.

திரு. கதிரவேலுப்பிள்ளை எம். பி. பேசியதாவது:-

தனியான ஓர் இயக்கத்தினால் தீண்டாமையைத் தீர்த்துவிட முடியாது. பல இயக்கங்களும் முன்வந்து பல வகைகளில் இதைத் தீர்க்கவேண்டும். 20,30 ஆண்டுகளுக்கு முன்னர் இளைஞர்கள் இதற்குக் காட்டிய உற்சாகத்தைப் பார்க்கும்போது இப்போதைய இளைஞர்கள் இதற்கு முன் வருகிறார்களில்லை.

சாதிப்பாகுபாட்டை ஒழிக்க முதலில் மக்கள் மனதை மாற்ற வேண்டும். மனம் மாறாமல் எதையும் செய்ய முடியாது.

பின்னர் சட்டத்தைப் பார்க்க வேண்டும். இங்கே பலாத்காரம் தேவையேயில்லை. இதைப் பலாத்காரத்தால் மாற்றவே முடியாது. இரத்தப் புரட்சி இங்கு எதையுமே செய்து விடாது, சட்டத்தில் வலு இல்லையென்றால் அதை பலாத்காரம் நிரப்பிவிடாது. என்னைப் பொறுத்தளவில் சட்டத்தில் பலவீ

## பாராட்டு

அளவெட்டி, சனி

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை தீண்டாமை ஒழிப்புச்சட்டத்தை பலாத்கார மூலம் அமுல் நடத்தமுனையாது. அன்பு, உண்மை, அகிம்சை என்ற அடிப்படையில் அமுல்நடத்தும்படி கூறிய கூற்றை அகில இலங்கை சைவ அநுட்டான பாதுகாப்புச் சபை பாராட்டுகிறது.

இதைப்பாராட்டி சைவ அனுட்டான பாதுகாப்பு சபைத்தலைவர் திரு. த. சிவலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:—

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை பலாத்கார முறையில் அமுல்செய்து சைவ மக்களை துன்புறுத்தி ஆலயத்துள் செல்வது அநீதி என்பதை உணர்ந்து சாத்வீக முறையில் பிரவேசத்தை நடத்தவேண்டுமென்று திரு. கதிரவேற்பிள்ளை தெரிவித்ததை நாம் பாராட்டுகின்றோம்.

ஒருசிலருக்கா பெரும்பான்மையினரின் மனதைப் புண்படுத்தி பலாத்காரமாகச் செய்யும் செய்கைகள் அநீதியாகும். ஆனபடியால் இருபகுதியினரும் பலாத்காரமின்றி ஒற்றுமையாக வாழ்ந்துவந்தால் கோவிலின் புனிதத்தன்மை கெடாது.'

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 2—3—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகிதங்கள்

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 நேயர் விருப்பம், 6-30 கானமஞ்சரி, 6-45 பாவளம், 7-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம் 'அந்தநாளும் வந்திடாதோ' 40-00தேர்ந்த இசை.

கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன் பின் துடுப்பெடுத்தாடிய இரட்டையர்களான கெங்காதரனும், திலுக்குமாரும் மிகவும் நிதானமாய் தமது கோஷ்டியின் எண்ணிக்கையை 104 ஆக உயர்த்தி விட்டனர். ஆனால் ஜெயரத்தினம் வீசிய பந்தை திலுக்குமார் ''சிக்ஸருக்கு'' அடித்ததினால், 14 வருடங்களாக சென். ஜோன்ஸ் கல்லூரி கட்டிக்காத்த புகழை கோட்டைவிட வேண்டியதாகி விட்டது.

ஆட்ட முடிவின் போது யாழ். இந்துக் கல்லூரி 8


48வது தினம்!

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த

**ஒளி விளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

**குடியிருந்த கோயில்**

மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30 மணி

M. R. ராதா - M. N. ராஜம் நடித்த

**ரத்தக் கண்ணீர்**

இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த

**தாய்க்குத் தலைமகன்**

REGAL at Jaffna

Daily 4Shows

10-30, 4-45, 7-00 & 9-45, p. m.

Giuliano Gemma & Corinne Marchand

in

ARIZONA COLT

(Adults only)

**MANOHARA**

JAFFNA

Daily at 6-30, 9-30 p. m.

Pre Poya-Poya 10-30, 2-30

Chitra

in

MAGIC CARPET

[Hindi]


ச. நிற்சிங்கம்

தலைவர்

கிராமசபை,

வட்டுக்கோட்டை.

கிராமசபை அலுவலகம்,

வட்டுக்கோட்டை.

28-2-69. 1204

சுன்னாகம் பட்டினசபை

ஆராய்வுக்குழு ஆதரவில்

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்

**திரு. ஏ. அஸீஸ்**

சொற்பொழிவு:-

யூதர் அராபியர்— பிரச்னை

இடம்:- சுன்னாகம் பட்டின சபை நூல்நிலையம், கே. கே. எஸ். ரேட்.

நேரம்:- பி. ப. 7மணி-3-3-69

1197

ரேட்டு, கோண்டாவில்.

714

## கர்ப்பிணிகள் கஷ்டம்

சுழிபுரம், சனி

தொல்புரத்தில் மருத்துவமாது இல்லாமல் கர்ப்பிணிகள் பெரிதும் கஷ்டம் அடைகின்றனர். கடந்த ஆண்டு கடமையாற்றிய மருத்துவ மாது இடமாற்றத்தை அடுத்து வேறு ஒருவர் அவ்விடத்துக்கு நியமிக்கப்படாமையே இடம்காலியாக இருப்பதற்குக் காரணமாகும்.


**ராணி**

(யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்.

எம். ஜி. ஆர்.

கே. ஆர். விஜயா

நடித்த

**விவசாயி**

இங்ஸ்லி



பிளாஸா

வெம்பிளி

(கண்டி)

ஸ்ரீகிருஷ்ண

(திருமலை)

வெலிங்டன்

(யாழ்ப்பாணம்)

மற்றும்

சினிமாஸ்திரைகளில்

சிவாஜி கணேசன்

கே. ஆர். விஜயா

முத்துராமன்,

எல். விஜயலக்ஷ்மி,

நாகேஷ், குமாரிசச்சு

இன்னும் பலர் நடித்த

ஸ்ரீதரின் மகோன்னத

ஈஸ்ட்மென்

கலர்ப் படைப்பு



**ஊட்டிவரை உறவு**

இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S. S. வாசன்

அவர்களால்

ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!



**ரவி** என்றால் ...

... "சரி"



ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.

உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்

சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்

திந்தையை வீணடித்தல்

இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி திந்தை பிரஷ்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை திந்தை பிரஷ்கள் வாங்கும் போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.

அதுவே தரத்தின் உத்தரவாதம்

சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.




RI-2-68-MASTERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு ஜேர்மனி விதித்துள்ள புதிய தடைகள்

# பேர்லின் போக்குவரத்தில் மேலும் நெருக்கடிகள்

## ரஷ்யக் குற்றச்சாட்டுக்கு மேற்கு ஜேர்மன் மறுப்பு

பொன். மார்ச். 1

**மேற்கு பேர்லினுக்கும் மேற்கு ஜேர்மனிக்குமிடையில் கிழக்குஜேர்மனி வழியாகராணுவத் தளபாடங்கள் எடுத்துச் செல்லப்படுவதற்கு எதிராக கிழக்கு ஜேர்மனி புதியகட்டுப்பாடுகளை அறிவித்திருக்கிறது. கிழக்கு ஜேர்மனிவழியாக மேற்கு ஜேர்மனிக்கும் மேற்கு பேர்லினுக்குமிடையில் நடைபெறும் போக்குவரத்துகள் மீது பெரிய அளவில் தடைகள் ஏற்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக இது இருக்கும் என்று பத்திரிகை நிருபர்கள் கருதுகின்றனர்.**

மேற்கு பேர்லினில் இம் மாதம் 5-ந் திகதி இடம் பெறவிருக்கும் அதிபர் தேர்தலையொட்டி அங்கு மேற்கு ஜேர்மனியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் தரை மார்க்கமாக போவதற்கு ஏற்கெனவே கிழக்கு ஜேர்மனி தடையுத்தரவு விதித்துள்ளது. இப்பொழுது ராணுவத்தளபாடங்கள் நடமாட்டத்துக்கும் தடை விதித்திருக்கின்றது.

மேற்குபேர்லினில் ராணுவத்தளபாடங்கள் தயாரிக்கப்பட்டு இரகசியமாகவெளியில் கொண்டுபோகப்படுவதாக ரஷ்யா அறிவித்ததைத் தொடர்ந்து கிழக்கு ஜேர்மனி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. மேற்கு பேர்லினில் ராணுவத் தளபாடங்கள் தயாரிக்கப்பட்டு வெளியில் கொண்டு போகப்படுவதாக ரஷ்யர் தெரிவித்துள்ளதை மேற்கு ஜேர்மனி மறுத்துள்ளது. என்னதான் கிழக்கு ஜேர்மனியும் ரஷ்யாவும் எதிர்ப்புகள் தெரிவித்தாலும் அடுத்த 5-ம் திகதி மேற்கு பேர்லினில் அதிபர் தேர்தலை நடத்துவதற்கு மேற்கு ஜேர்மனி உறுதி கொண்டிருக்கிறது.

# பழைய சண்டைகளை மறக்க சொல்கிறார் நிக்ஸன்

## அமைதிக்காக உழைக்க டிகாலுக்கு அழைப்பு

பாரிஸ், மார்ச் 1

பழைய சண்டை சச்சரவுகளை மறந்துவிட்டு உலக அமைதிக்காக சேர்ந்து உழைக்க முன்வரும்படி அமெரிக்க அதியர் நிக்ஸன் பிரெஞ்சு அதிபர் டிகோலை கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பிரெஞ்சு அதிபரோடும் இதர தலைவர்களோடும் பேச்சுவார்த்தைகள் நடத்... பர் நிக்ஸன் பேசுகையில், இருநாடுகளுக்குமிடையில் உள்ள பாரம்பரிய நேச உறவுகளைக் குறிப்பிட்டார். பழைய கோபதாபங்களையும் சண்டை சச்சரவுகளையும் மறந்து நேச உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

திரு. நிக்ஸன் பாரிஸ் வந்து சேர்ந்தவுடன் பல

சூரிச்சம்பவம்

## அரபு நாடுகளில் ஆட்சேபம்

சூரிச், மார்ச். 1

சூரிச்சில் அண்மையில் இஸ்ரேல் விமானமொன்றின் மீது அரபுக் கொமாண்டோ புரட்சி வாதிகள் தாக்குதல் நடத்தியது குறித்து சுவிட்சர்லாந்து மூன்று அரபுநாடுகளுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

சிரியா, ஜோர்டான், லெபனான் ஆகிய நாடுகளுக்கு சுவிட்ஸர்லாந்து அ...

## 'மற்றொரு புற்றுநோய் சிகிச்சை நிலையம் அவசியம் வேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றபோது புற்றுநோயாளருக்காகச் சேர்க்கப்படும் நிதி குறைவெனவும், வறிய புற்று நோயாளர்களுக்கு நிதி வசதியளிக்க நிதி திரட்ட முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமெனவும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

இலங்கைப் புற்றுநோய்த் தடுப்புச் சங்கத் தலைவரிடம் இக்கிளைச் சங்கத்துக்கு ரூபா 10,000 அளிக்கவேண்டுமெனக் கேட்பதாகவும் சங்கம் தீர்மானித்தது. 1964ம் ஆண்டு கனடாவில் அப்பொழுதிருந்த கனடாவின் தேசிய புற்று நோய் நிறுவனத்தின் அதிபர் டாக்டர் ஆர். எம். ரெய்லர் 64ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அனுப்பிய ஆலோசனைக் கடிதமும் சங்கக் கூட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டது. டாக்டர் ரெய்லர் இலங்கையில் புற்றுநோய்த் தடுப்பு நிகழ்ச்சி முன்னேற்றமடையவேண்டுமெனின் கண்டியிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ மேலுமொரு புற்றுநோய்சிகிச்சை நிலையம் நிறுவப்படவேண்டுமெனக் கூறியிருந்தார். இந்த ஆலோசனை கூறப்பட்டு 5 வருடமாகியும் ஒருவித முன்னேற்ற நடவடிக்கையும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லையெனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. கூட்ட முடிவில் புது வருட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 'பெண்களை நியமியுங்கள்'

நாவலப்பிட்டி, சனி

## தேர்தல் பிரசாரம் பற்றி ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அடுத்த பொதுத்தேர்தல் பிரசாரத்திற்கான ஒழுங்கு பற்றி நேற்றுமுன்தினம் நடந்த தமிழ்க்காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது.

முதலியார் சி. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டதாகத் தெரியவருகிறது.

தேர்தல் பிரசார குழு ஒன்று தெரிவுசெய்வதுபற்றியும், தொகுதிகள் தோறும் பிரசாரக்கூட்டங்கள் நடாத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

தேர்தல் பிரசாரம் பற்றி முக்கிய விஷயங்கள் இம்மாதம் 3-ம் திகதி நடைபெறும் கூட்டத்தில் முடிவுசெய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பாராட்டு விழா

கெக்கிராவை, சனி

கெக்கிராவை பப்ரிஸ்ற் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக உதவியாசிரியராகவும், பதில் தலைமையாசிரியராவும் கடமையாற்றி மாற்றம் பெற்றுச் சென்ற திரு. மு. கணபதிப்பிள்ளை ஆசியருக்கு கெக்கராவைப் பொதுமக்கள் திரு. க. சற்குருநாதன் தலைமையில் ஒரு பாராட்டு விழாவை நடத்தினார்கள். திருவாளர்கள் பொ. சபாரத்தினம், எஸ். எஸ். சிவநேசன், க. தம்பிப்பிள்ளை, த. நடராஜலிங்கம் செல்விகள் தி. பரமேஸ்வரி, ம. அம்சத்உம்மா கு. சரோஜினிதேவி ஆகியோர் அன்னாரின் குணநலன்களைப் பாராட்டிப் பேசினர். பொதுமக்களால்

## ஜேர்மனி செல்கிறார்

பருத்தித்துறை, சனி

சாவகச்சேரி கூட்டுறவு வங்கியைச் சேர்ந்த திரு. ஏ. பி. தணிகாசலம், பொருளாதாரத்தில் பட்டம் பெறும் பொருட்டு இம் மாத இறுதியில் மேற்கு ஜேர்மனி செல்லவிருக்கிறார். கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இவர் இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. ஜே. எஸ். வேலாயுதத்தின் மருமகனாவார்.

## நகை வியாபாரி தற்கொலை

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறைப்பகுதியில் உள்ள நகை வியாபாரியான கே. இரத்தினசிங்கம் நேற்று முன்தினம் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். மரண விசாரணையின்போது குடும்பத் தகராறே தற்கொலைக்குக் காரணமென தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி மரணவிசாரணை அதிகாரி திரு. கே. இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## வயோதிபரின் அன்பளிப்பு

நாவலப்பிட்டி, சனி

வயோதிபர் இல்லத்தில் உள்ளவர் ரூபா 2000 புத்த கோயில் கட்ட அன்பளித்தார். அவ்வளவு தொகையும் அவரது தலையணையின் உள் சேர்த்து வைத்திருந்தாராம்.

நாவலப்பிட்டி செம்ரூக் வயோதிபர் இல்லத்திலிருக்கும் எம். ஜி. அப்புஹாமி என்பவர் அவ் வயோதிபர் இல்ல முன்றலில் அமைக்கும் புத்தர்கோயில் கட்டிட நிதிக்கு ரூபா இரண்டாயிரத்தை காரியாதிகாரி திரு வீரப்பானவிடம் ஒப்படைத்தார்.

ஊழியருக்கு

## இலவச தேநீர்

அராலி, ஞாயிறு

தேநீர், சிற்றுண்டி முதலியவற்றுக்காக அலுவலகத்தைவிட்டு ஊழியர் வெளியே செல்வதால் சமாஜ அலுவல்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்கமாக வலி - மேற்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்க சமாஜநிர்வாகம் காலையிலும் மாலையிலும் சமாஜச் செலவிலேயே ஊழியர்களுக்கு இலவச தேநீர் பானம் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளது.

## பலாலி விமான நிலைய முகப்புவாசல் திறப்புவிழா

அளவெட்டி, ஞாயிறு

பலாலி ஆகாய விமான நிலையத்தை சுற்றி பல ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட முட்கம்பி அரண் வேலியின் முக்கிய முகப்பு வாசலை இன்று காலை 10 மணிக்கு சம்பிரதாயமுறைப்படி அகில இலங்கை விமானச் சேவை அத்தியட்சகர் திரு. டபிள்யூ. எல். பி. டிமெல் திறந்துவைப்பார்.

பலாலி விமான நிலைய உதவித் தளபதி திரு. என். நடராசா தலைமையில் நடைபெறும் இத் திறப்புவிழாவில் பல விமானப்பகுதி உயர் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வந்து கலந்து கொள்வார்கள்.

மேற்படி விமான நிலையத்தை சுற்றி அரண் அமைக்கப்படாததால் இதுவரை காலமும் விமானம் இறங்குவதில் கஷ்டமேற்பட்டது. கட்டாக்காலி ஆடு, மாடுகளும் மனிதர்களுமே இக் கஷ்டத்தை விளைவித்தனர்.

இதனாலேயே இவ் அரண் அமைக்கப்பட்டதாகவும் இது விமான சேவை சீரடைய ஏதுவாவதோடு விமானச்சாரதிகளுக்கு இருந்த கஷ்டத்தையும் போக்கும் என விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## "சமுதாயத்தின் முழுக் குரலே இலக்கியமாகும்'

கண்டி. சனி

நச்சு இலக்கியங்களையும், இதிகாச இலக்கியங்களையும் விரும்பிப்படிக்கும் இக்கால கட்டத்தில், தொழிலாள் வர்க்கத்தின் எதிரொலிகளையும், தாக்கங்களையும் எடுத்துக் கூறும் இலக்கியங்கள் கருகி மறைந்து கொண்டு போகின்றன. அவர்கள் மத்தியில் தாக்குப்பிடித்து முற்போக்கு இலக்கியம் படைப்பவர் எழுத்தாளர் அகஸ்தியர்'' என்று திரு. இரா. சிவலிங்கம்கண்டி இந்துசிரேஷ்ட பாடசாலை பண்டபத்தில் நடந்த எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியரின் 'இருளினுள்ளே' நூல்வெளியீட்டு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்,

இலங்கை முற்போக்கு கலை இலக்கியச் சங்கத்தின் அதரவில் நடைபெற்ற இவ் விழாவில், திரு. எஸ் அகஸ்தியர் பேசுகையில் ''தான் வாழும் சமுதாயத்தின் முழுக்குரலாக வடிவம் பெறுவதே நல்ல இலக்கியமாகும். நச்சு இலக்கியங்கள் சமுதாயத்தைபடித்துவிடும். இதைக் கருத்திற் கொண்டு, தேசியத் தன்மை வாய்ந்த முற்போக்குக்கலை இலக்கியங்களைப் படைக்கவேண்டும்'' என்று கூறினார்.

திருவாளர்கள் பன்னீர்ச் செல்வம், அ. ராமன், அரு. சிவானந்தன், எஸ். கற்கையான், மரியதாஸ், இரத்தின சபாபதி ஐயர் ஆகியோரும் பேசினர்.

ஆஸ்பத்திரி

## சமயலறை வீடாகியதாம்

முல்லைத்தீவு, சனி

## சான்றிதழ் வழங்கவில்லை

பருத்தித்துறை, சனி

1965-ம் ஆண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறிய ஆசிரியருக்கு இதுவரை கல்விச் சான்றிதழ் வழங்கப் படாமையால், அவர்கள் முதலாந்தரத்துக்கு உயர்த்தப்படமுடியாத நிலையில் உள்ளனராம். இது பற்றி, பல ஆசிரியர் கல்வியமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## பயிற்சி வகுப்புகள்

பருத்தித்துறை. சனி

பொதுவிஞ்ஞானம், புவியியல். கணிதம் ஆகியபாடங்களில் ஆசிரியருக்கானபயிற்சி வகுப்புக்கள் போயாவுக்கு முன்தினம் சாவகச்சேரி றிபேக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தக்கல்லூரி. கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெற ஆரம்பித்துள்ளன.

## தீவுப் பகுதியில் பொருட் காட்சி

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை தொகுதியில் எதிர்வரும் மே மாதத்தில் விவசாய கைத்தொழில் பொருட்காட்சி ஒன்றைநடத்துவதற்குதீவுப் பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் தீர்மானித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவுகளை மறந்துவிட்டு உலக அமைதிக்காக சேர்ந்து உழைக்க முன்வரும்படி அமெரிக்க அதிபர் நிக்ஸன் பிரெஞ்சு அதிபர் டி கோலை கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பிரெஞ்சு அதிபரோடும் இதர தலைவர்களோடும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக அதிபர் நிக்ஸன் நேற்று பாரிஸ் வந்துசேர்ந்தார். அவரை பிரெஞ்சு அதிபர் டி கோல் வரவேற்றார்.

திரு. நிக்ஸன் பாரிஸ் வருவதற்கு முன்னர் தாம் போய்வந்த எல்லா ஐரோப்பிய நாட்டுத்தலைவர்களையும் மேற்கொண்டும் ஆலோசனைகள் நடத்துவதற்கு அமெரிக்காவுக்கு வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார்.

பாரிஸ் வரவேற்பில் அதி... உள்ள பாரம்பரிய நேச உறவுகளைக் குறிப்பிட்டார். பழைய கோபதாபங்களையும் சண்டை சச்சரவுகளையும் மறந்து நேச உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

திரு. நிக்ஸன் பாரிஸ் வந்து சேர்ந்தவுடன் பல பகுதிகளில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், மோதல்களும் இடம்பெற்றன. சுமார் 200 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாரிஸிலுள்ள அமெரிக்க ஹில்டன் ஹோட்டலின் முன் பெரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

திரு. நிக்ஸன், அதிபர் டி கோலுடன் தமது முகற்கட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார். பேச்சுக்கள் இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

# குங்குமப் பூ பயிர் செய்கைக்கு புத்துயிர்

ஸ்ரீநகர், மார்ச் 1

உலகிலேயே குங்குமப்பூ பயிர் செய்கைக்குப் பெயர் பெற்ற ஒரேயொரு பிரதேசமான காஷ்மீரில் சமீபகாலத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்த இப்பயிர் செய்கை திரும்பவும் புத்துயிர் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காஷ்மீரில் பத்மபுரம் என்று அழைக்கப்பட்டபம்போறிப் பகுதி இச் செய்கைக்குகந்த விசேட மண்வளமும் காலநிலையுமுடையதாக விருந்தும் அங்குஇப்பயிர் செய்கை புறக்கணிக்கப்பட்டது அதிசயிக்கத்தக்க தொன்றெனவும் கருதப்படுகிறது. இப்பயிரை உற்பத்தி செய்வதில் ஏற்படும் பெரும் கஷ்டத்தாலும், கொந்தராத்து முறையால் கமக்காரர்களுக்கு ஏற்படும் கஷ்டநஷ்டங்களாலும் குங்குமப்பூ பயிர்ச் செய்கை புறக்கணிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது.

இக்கஷ்டங்களுக்கெல்லாம் தீர்வுகாணவும் இப்பயிர் செய்கையில் ஏற்படும் பிரச்னைகளையாராயவும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு செய்த சிபார்சின் பிரகாரம் பம்போறிப் பகுதியில் உள்ள 4323 ஏக்கர் குங்குமப்பூச் செய்கைக்குரிய நிலத்தில் அரசாங்கத்துக்குரிய நிலம் முன்னர் அந்நிலங்களில் பயிர் செய்தவர்களிடம் திருப்பிக் கையளிக்கப்பட்டதோடு இப்பயிருக்கு மிருகங்களாலும் கள்வர்களாலும் சேதமேற்படாமல் கவனிக்கவும், சந்தை வசதி செய்து கொடுக்கவும் காஷ்மீர் அரசாங்கம் உதவுமென நம்பப்படுகிறது.

## 'சமாதி பற்றி பேசவில்லை'

சென்னை, மார் 1

அறிஞர் அண்ணாவின் உடலை சென்னை மரீனா கடற்கரையில் அடக்கம் செய்வது பற்றி முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தன்னுடன் பேசியதாக பத்திரிகைகளிலிருந்து தான் அறிவதாகவும் அடக்கம் செய்வது பற்றி தன்னுடன் எதுவித பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்படவில்லையென்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் ஓர் அறிக்கைமூலம் தெரிவித்திருக்கிறார்.

தொடர்ந்து அவ் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- "அண்ணாதுரையின் உடலை மரீனா கடற்கரையில் அடக்கம் செய்திருப்பது பலருக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது. இதனால் மந்திரி சபையினர் மீண்டும் இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டுமென ஒரு உயர்தர அதிகாரி மூலம் சொல்லியனுப்பினேன்.

## இடமாற்றம்

அராலி, சனி

கெக்கிராவைப் பப்ரிஸ்ற் மிஷன் தமிழ்ப்பாடசாலையிலிருந்து திரு. மு. கணபதிப் பிள்ளை பண்டத்தரிப்பு சாந்த சிற்றம்பல வித்தியாசாலைக்கு இடமாற்றம்பெற்றுள்ளார்.

ரேல் விமானமொன்றின் மீது அரபுக் கொமாண்டோ புரட்சி வாதிகள் தாக்குதல் நடத்தியது குறித்து சுவிட்சர்லாந்து மூன்று அரபுநாடுகளுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

சிரியா, ஜோர்டான், லெபனன் ஆகிய நாடுகளுக்கு சுவிட்ஸர்லாந்து ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## குடி தண்ணீரை விலைக்கு விற்றாராம்

சென்னை மார். 1

குடி தண்ணீரை விலைக்கு விற்றதாக சென்னை மாநகராட்சி லொறிச் சாரதியொருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். பொது மக்களுக்கு இலவசமாக விநியோகிக்க வேண்டிய தண்ணீரை இவர் விலைக்கு விற்றாராம். சோடா கம்பனியொன்றுக்கு இவர் தண்ணீரை விற்கையில் மாநகரசபை அங்கத்தவர் ஒருவர் கண்டுபிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைத்தாராம்.

## அனுதாபக் கூட்ட

அளவெட்டி, சனி

அமரர் அண்ணாவின் அஞ்சலிக் கூட்டமொன்றை புரட்சிவாத சமசமாஜக் கட்சி வாலிபர்கள் நடத்த இருக்கின்றனர்.

சுன்னாகத்தில் இன்று மாலை நடைபெறும் இக் கூட்டத்துக்கு சுன்னாகம் பட்டினசபை உபதலைவர் திரு. இ. ராசதுரை தலைமை வகிப்பார்.

இக் கூட்டத்தில் பல அறிஞர்கள் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துவார்கள்.

## வருடாந்த உற்சவம்

நாவலப்பிட்டி, சனி

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் வெகுவிமரிசையாக நடைபெற்றுவருகிறது.

நாளை நாவலப்பிட்டி யாழ்ப்பாண வாசிகள் ஆதரவில் நடைபெறும் விழாவில் தவில் வித்துவான் திரு. என். ஆர். சின்னராசா நாதஸ்வரவித்துவான் லயஞான சோதி பி. எஸ் ஆறுமுகம் பிள்ளை கோஷ்டியினரின் கச்சேரியும் நடைபெறும்.

யாழ்ப்பாணம் உரும்பராய் திரு. அ. பூபாலசிங்கத்தின் முத்துச்சப்பரத்தில் ஸ்ரீஅம்பாள், கணேசப்பெருமானின் வீதிஉலா பவனியும் இடம்பெறும்.

வருட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 'பெண்களை நியமியுங்கள்'

நாவலப்பிட்டி, சனி

'தேயிலைத் தோட்டங்களில் அதிகமான வருவாயை ஈட்டித் தருபவர்கள் பெண் தொழிலாளிகளே. கொழுந்து பறித்தல் முதல் தேயிலையை ரகம் பிரிக்கும் தொழில் வரையிலான சகல வேலைகளையும் செய்வதுடன் ஆண் தொழிலாளரைவிட அதிக சம்பளம் பெறுபவர்களும் பெண் தொழிலாளிகளே. ஆகவே தோட்டங்களைக் கண்காணிக்கும் சுப்பிரிண்டன்ட் வேலைகளுக்கும் பெண்களை நியமிக்கவேண்டும்.'

இவ்வாறு புசல்லாவ கிளைத் தோட்ட உத்தியோகத்தர்களின் விளையாட்டு விழாவில் பேசிய மேற்படி கிளைத்தலைவர் திரு. ஆர். எல். ஜே. டீ. மெல் குறிப்பிட்டார். நகரசபைத் தலைவர் ஜனாப். ஏ. பதுர்தூன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## கொலை வழக்கு எதிரி றிமாண்டில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கின் எதிரி மீண்டும் றிமாண்டில் வைக்கப்பட்டார். வழக்கை இம்மாதம் 12ந் திகதிக்கு ஒத்திவைத்த தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். கனகரத்தினம் அதுவரை எதிரியை மீண்டும் றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 27ந் தேதி யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மரணமான நமசிவாயம் நவரத்தினத்தை [52 வயது] அடித்துக் கொலை செய்ததாக இராசலிங்கம் என்பவருக்கு எதிராக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் பகுதியினர் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

கைகலப்பொன்றில் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்து நான்குநாட்களின் பின்னரே நவரத்தினம் மரணமானார். இதுசம்பந்தமாக ஏற்கனவே மாஜிஸ்திரேட் விசாரணையும் ஆஸ்பத்திரியில் நடாத்தப்பட்டது. (கா. நி)

கள் பொ. சபாரத்தினம், எஸ். எஸ். சிவநேசன், க. தம்பிப்பிள்ளை, த. நடராஜலிங்கம் செல்விகள் தி. பரமேஸ்வரி, ம. அம்சத்உம்மா கு. சரோஜினிதேவி ஆகியோர். அன்னாரின் குணநலன்களைப் பாராட்டிப் பேசினர். பொதுமக்களால் பொற்கிழியும் வழங்கப்பட்டது.

## சியவச எதிர்ப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சியவச சுவீப் டிக்கட் விற்பனையை எதிர்க்குமுகமாக இன்று மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் எதிர்ப்புக் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

டாக்டர் த. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் யாழ் பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு, சி. பொன்னையா யாழ் உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம், திரு எஸ். அன்ரனி திரு. எஸ். செந்தில்நாதன், டாக்டர் கே. கனகரத்தினம் உட்பட மற்றும்பலர் பேசுவார்கள்.

## சாரணை நடைபெறுகிறது

மாங்குளம், சனி

கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த தபால் ரயில் வண்டி மாங்குளத்தில் வந்துகொண்டிருந்தபோது கைகாட்டியை அவதானிக்காமல் செலுத்திவந்ததினாலேயே இன்னுமொரு ரயிலுடன் அது மோதப் பார்த்ததாகவும் கடைசி நேரத்தில் அது தவிர்க்கப்பட்டதாகவும் மாங்குளம் புகையிரத நிலையத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இது சம்பந்தமாக விசாரணை நடைபெறுகிறது.

## புதியஉறுப்பினர்

புங்குடுதீவு, சனி

பாரதி சனசமூகநிலையத்தின்வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற 24-ம் திகதி திரு. ஆர். மார்க்கண்டுதலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ப. சொர்ணலிங்கம், உப தலைவர் திரு. ப. வீரவாகு, செயலாளர் திரு. மு. நமசிவாயம், உப செயலாளர் திரு. ம. இராமலிங்கம், பொருளாளர் திரு. சி. கண்ணுத்துரை, பரிசோதகர் திரு. வே. தம்பிராசா. நான்கு பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

கப்படுவதைத் தவிர்க்கும் நோக்கமாக வலி - மேற்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்க சமாஜநிர்வாகம் காலையிலும் மாலையிலும் சமாஜச் செலவிலேயே ஊழியர்களுக்கு இலவச தேநீர் பானம் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளது.

## இன்றைய பலன்

ஞாயிற்றுக்கிழமை

(2-3-69)

மாசி மாதம், 19 உ

திதி- திரயோதசி. பகல் 10-25 மேல் சதுர்த்தசி.

நட்சத்திரம்- ஆயிலியம். இரவு 9-40 மேல் மகம்.

ராகுகாலம்- 4-58—6-28.

சுபநேரம்- 9-28—10-58.

இன்று பிறந்தவர்களுக்கு- மனைச் சிறப்பு, மக்கள் சுகம், மாடு கன்று விருத்தி, நினைத்தது ஜெயம், நிம்மதியும் உண்டு, கைத்தொழில் புரிவோர்க்கு கனதனம் சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு மத்திம பலனைக்கொடுக்கும் நல்லாண்டாகும்

மேஷம்- தொழில் மந்தம், வரவில் தடை.

ரிஷிபம்- பொருளும் அருளும் கிடைக்க வழியுண்டு.

மிதுனம்- பிடிவாதம் வேண்டாம், பின் வருந்த நேரிடும்.

கடகம்- கிட்டி வரும் பகை, எட்டி நில்.

சிம்மம்- சொற் சிறப்பு சொகுசான வாழ்வு.

கன்னி- சகோதர நலன் சஞ்சல நிவர்த்தி.

துலாம்- தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்வு.

விருச்சிகம்- அறவழி நாட்டம், தாராள மனம்

தனுசு- அந்நிய வாசம், அகால போசனம்.

மகரம்- துளிர் விடும் காதல், ஒளிவிடும் வாழ்வு

கும்பம்- துஷ்டர் உறவு, துயரச் செய்தி.

மீனம்- குரு விசுவாசம் குறிக்கோள் வெற்றி.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

யான், மரியதாஸ், இரத்தின சபாபதி ஐயர் ஆகியோரும் பேசினர்.

ஆஸ்பத்திரி

## சமயலறை வீடாகியதாம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலைக்கென ஒரு லட்சம்ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட சமயலறை ஒன்றரை வருடமாகியும் பாவிக்கப்படாமல் இருக்கிறதாம். இதற்குப் பதிலாக இங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவர் இதைதமது இருப்பிடமாக்கிக் கொண்டார். இவருக்கும், இவரின் கீழ் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் அரசாங்கத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் உண்டென்றும், ஆதலால் ஆஸ்பத்திரி சமையலறையை உடனடியாக பாவனைக்காக எடுக்கஆவன செய்யும்படியும் இப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை வவனியா எம். பி.யிடம் சமர்ப்பித்துள்ளனர்.

## சிங்களத்தேர்ச்சி வேண்டாம்

சுழிபுரம், சனி

சிங்களத் தேர்ச்சியினின்றும் விதிவிலக்கு அளிக்குமாறு கோரும் ஒரு தீர்மானம் வடபகுதி மருந்துக் கலவையாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டத்துக்கு திரு. எஸ். செந்தில்நாயகம் தலைமைவகித்தார்.

## சிங்கள நடிகரின் தமிழிசை

பருத்தித்துறை, சனி

நெல்லியடியில் நடைபெற்ற சுவீப் சீட்டிழுப்பை தொடர்ந்து இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகளில் சிங்கள நடிகர் ஜோதிபாலா நடிகையர் பத்மினி சுனேத்ரா ஆகியோர் தமிழ் பாட்டுக்களையும் பாடினர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர் சிலரது பைலா நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

## இருநேர பாடசாலை

முல்லைத்தீவு, சனி

இதுவரை ஒரு நேரப் பாடசாலையாக இயங்கிவந்த முல்லைத்தீவு மகாவித்தியாலயம் முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. கந்தையாவின் நடவடிக்கைகள் காரணமாக தற்போது இரு நேரப்பாடசாலையாக இயங்குகின்றது.

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை தொகுதியில் எதிர்வரும மே மாதத்தில் விவசாய கைத்தொழில் பொருட்காட்சி ஒன்றைநடத்துவதற்குதீவுப் பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் தீர்மானித்துள்ளார்.

வடபகுதியில் உள்ளகைத்தொழில், விவசாய ஸ்தாபனங்கள் இப் பொருட்காட்சியில் பங்குபற்றும்.

## காரிய திகாரி கேட்டுள்ளார்

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியிலுள்ள பருத்தியடைப்பு. காரைநகர் வேலணை, நாரந்தனை புங்குடுதீவு முதலிய இடங்களில் உள்ள வறிய மீனவர்கள் பண உதவி பெறவாய்ப்பு ஏற்படும் என நம்பப்படுகிறது.

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு விநாயகலிங்கம் வடபகுதி அரசாங்க அதிபரிடம் இது சம்பந்தமான நிதி உதவி கேட்டுள்ளார்.

இன்று

## இலங்கை வானொலியில் அண்ணா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை வானொலிதேசிய ஒலிபரப்பு தமிழ் சேவையில் இன்று இரவு 9-30 மணி முதல் 10-15 மணிவரை அறிஞர் அண்ணாதுரைபற்றி ஒரு விசேஷ நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும். இந்நிகழ்ச்சியில், உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், திரு. சி. இராசதுரை, திரு. எஸ். தொண்டமான் ஆகியோர்களும் கலந்து கொள்வார்கள். அண்ணாவின் சொற்பொழிவுகளில் சில பகுதிகளும்ஒலிபரப்பப்படும்.

## கம்பராமாயண பிரசங்கம்

சுழிபுரம், சனி

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் இலட்சார்ச்சனை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்து தினமும் கம்பராமாயணப்பிரசங்க தொடரைச் சைவப்பெரியார் திரு. வே. த. மயில்வாகனம் நிகழ்த்தி வருகின்றார்.

## பௌர்ணமி விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரசபை அளிக்கும் பௌர்ணமி நாள் கலைவிழா நாளையாழ். திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. (ந. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''உலக மக்களின் செய்கைகள் நாசகாரச் செய்கைகளாக இருந்திருந்தால் உலகம் முன்னமே அழிந்திருக்கும் என்பதை நாம் உணரமுடியாதா? அன்பு, அல்லது வேறு விதம் சொல்லவேண்டுமானுல், அஹிம்சையால்தான் இந்த உலகம் நிலைத்துநிற்கிறது.''

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 19-ந் திகதி
(2 - 3 - 69)


## தமிழில் ஏன் இல்லை?

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு கொழும்பு மாநகர சபை அளித்த வரவேற்பிலே சிங்களமும் ஆங்கிலமும் மட்டுமே இடம்பெற்றன. தலைநகரான கொழும்பில் சுமார் பாதிப் பேர் தமிழ் பேசுபவர்கள். அப்படியிருந்தும் தமிழைப் புறக்கணித்த காரணமென்ன?

தனிச் சிங்களத்தில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் வரவேற்பு உபசாரப்பத்திரத்தை மேயர் வாசித்தளித்ததாயும், அமைச்சரும் அவ்விரு மொழிகளிலும் பதிலளித்ததாயும் தெரிகிறது. மேயர் தமிழிலும்பேசியிருந்தால், அமைச்சரும் அம்மொழியைப் புறக்கணிக்காமல் இருந்திருக்கக்கூடும். தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட மேயரே தமிழைப் புறக்கணிக்கக்காரணமென்ன?

பிரிட்டிஷ் மகாராணியார் கொழும்பு மாநகரசபைக்கு விஜயம் செய்தபோது அப்போது மேயராக இருந்த ருத்ரா அவர்கள் தமிழ் உள்ளிட்டு மூன்று மொழிகளிலும் வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தாரென்பது குறிப்பிடத்தக்கது. அந்த மேலான பழைய சம்பிரதாயத்தை ஏன் கைவிடவேண்டும்? தலைநகரிலே வசிப்பவரில் பாதிப்பேர் தமிழ் பேசுகையில், தமிழை மாநகரசபையே புறக்கணிப்பது, அவ்வளவு பேரையும் அவமதித்து புறக்கணிப்பதாகாதா? இதைப்பற்றி எடுத்துக்கூற அச்சபையிலோ, வெளியிலோஒரு தமிழ்த்தலைவரும் முன்வராதது பெரிய துரதிருஷ்டம். தமிழுக்கு உரிய இடம் வேண்டுமென்பதில் தமிழ்பேசும் மக்களே அலட்சியமாக இருப்பின், அம்மொழியின், அந்த இனத்தின் கதி என்ன ஆகுமென்கள் திருப்தியடைவரென்று யாரும் கருதினுல் அதைவிடப் பெரிய தவறு இருக்கமுடியாது- ஏனெனில் தலைநகர் உள்ளிட்டு இந்நாட்டிலே தமிழ்ப்பேசும் மக்களில் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் தெரியாது. வாதத்துக்காகத் தெரிவதாகவே வைத்துக்கொண்டாலும்,இவ்வித விசேஷ வைபவங்களில், தமிழ் இனத்தைக்கௌரவிக்கவாவது, தமிழையும் பயன்படுத்தி இருக்கவேண்டும். தென்னிலங்கையில் தமிழ்விஷயமாக தாராளமனப்பான்மை காட்டுவதாயின்வடக்கு,கிழக்கு மாகாணங்களிலும் மொழி பற்றி நல்லமனமாறுதல்ஏற்படவும் அமைச்சர் வற்புறுத்தும் இன ஒற்றுமைக்கு வழி பிறக்கவும் கூடும்.

இன, சமய ஒற்றுமையை வளர்த்தால் தான், நாட்டு மக்களிடையே சமாதானத்தையும் செல்வத்தையும் பெருக்க முடியுமென்று அமைச்சர் சுகததாஸா சரியாக வற்புறுத்திஞர். இதே நோக்கத்துடனேயே, அவர் யாழ்ப்பாணம் வந்திருக்கையில், சில கூட்டங்களில் தமிழிலும் பேசி, அப்பகுதி மக்களின் அபிமானத்தையும் பெற்றுர். ஓர்இனத்தின்மானமும் மதிப்பும் அதன் மொழியில் பெரிதும் தங்கியுள்ளது. இந்நாட்டில் இன ஒற்றுமையை வேண்டுபவர்கள், தமிழ்மொழியை எக்காரணம் பற்றியும் புறக்கணிக்க முடியாது. இவ்விஷயத்தில் உள்ளூராட்சி அமைச்சர் தீர்க்க தரிசனத்துடனும் பரந்தநோக்கத்துடனும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலமே வழிகாட்டச் செய்வதாயின், அவரே இந்நாட்டில் சமாதானத்தையும் செல்வத்தையும் பெருக்க உதவியவராவார். தேசிய ஒற்றுமையையும் தமிழ் இனத்தின் ஆதரவையும் விரும்பும்

நிர்வாக மொழி கருத்தரங்கு

# "மொழிப்பிரச்னையை தீர்க்கவே பிரேரணையைகொண்டுவந்தேன்"

— திரு. ஏ. விஸ்வநாதன் —

[யாழ்ப்பாணம்மாநகரசபைநிர்வாகமொழிபற்றி, யாழ். மாநகரசபையில் திரு. ஏ. விஸ்வநாதன் கொண்டுவந்த பிரேரணை தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விஷயமாக இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள 'நிர்வாகமொழிகருத்தரங்கில்' தமது பிரேரணை பற்றி திரு. ஏ. விஸ்வநாதன் விளக்கி கூறுகிறுர். வாசகர்கள் இக்கருத்தரங்கில் பங்கு பற்றி தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.]

திரு. ஏ. விஸ்வநாதனின் பிரேரணை வருமாறு: யாழ் மாநகரசபையின் நிர்வாக மொழி தமிழ்மட்டும் என்று அதாவது ஆங்கில மொழி எச்சந்தர்ப்பத்திலும் உபயோகிக்கலாகாது. இச்சபை மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டிய சந்தர்ப்பத்தில் தமிழ் மொழிமூலம் தொடர்பு கொள்வதுடன் அதன் சிங்கள மொழிபெயர்ப்பையும் இணைத்தல் வேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 2 வாக்குகளும், எதிராக14 வாக்குகளும்கிடைத்ததால் தீர்மானம் சபையில் தோல்வியுற்றது. 6 உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்தனர். ஒருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

எமது மாநகரசபையின் இரண்டாவது கூட்டத்தில் நான் பிரேரித்த பிரேரணை பெரும் பரபரப்பை சபையினர் மத்தியிலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் கிளப்பியுள்ளது.

நான் இப்பிரேரணையைப் பிரேரித்தபொழுது, நான் ஒரு சமசமாஜி என்ற காரணத்திஞல், அதனைப் பிரேரிக்கவில்லை. ஆனுல், நம் நாட்டில் கிளம்பியுள்ள மொழிப் பிரச்னையைச் சுமுகமான முறையிலே தீர்க்க வேண்டும் என்ற நோக்குடனும் தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தவேண்டும் என்ற நோக்குடனுமே பிரேரித்தேன். நானும் ஓர் தமிழன். எனக்குத் தமிழ்ப்பற்றும் தமிழ்க்கலை கலாச்சாரங்களை வளர்க்கவேண்டுமென்ற ஆவலும் உண்டு. எனவேதான், பொறுப்புணர்ச்சியுடனேயே இப்பிரேரணையைக் கொண்டு வந்தேன் என ஆரம்பத்தில் வற்புறுத்துகின்றேன்.

### நகரத்தின் நிர்வாகம்

யாழ்ப்பாணம் தமிழ் பேசும் பிரதேசத்தில் உண்டு என்றதனுலும், இந் நகரத்தில் வாழ்கின்றவர் இன்று நிலைமை வேறு. இன்று தமிழிலேயே கற்கின்றனர். இவர்கட்கு ஆங்கிலம் தெரிந்தால் அரை குறையாகவே தெரியும். இதனுல் எவ்வகையிலும்- நாம் விரும்பினுல் என்ன, விரும்பாவிட்டால் என்ன இன்னும் ஒரு சில வருடங்கள் நகர நிர்வாக ஊழியர் தமிழ் கற்றவராகவே இருப்பர். அவ்வாறே மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சிங்களமும் தமிழும் கற்றவராகஇருப்பர் எனவேதான்' நகரத்தின் நிர்வாகத்தை இயக்கும் பொழுது, எச்சந்தர்ப்பத்திலும் ஆங்கிலம் உபயோகிக்கலாகாது என்றேன் உற்று நோக்கினுல் ஆங்கிலம் எதற்கு?

### மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு

எனது பிரேரணையின் இரண்டாம் பகுதியில், மாநகரசபை மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் பொழுது தமிழில் செய்வதுடன் அதனுடன் சிங்கள மொழிபெயர்ப்பையும் இணைத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டேன்.

இன்று நடப்பதென்ன? இன்று மத்திய அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளும் பொழுது ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்கின்றேம். ஆனுல் இந்நிலைமை இன்னும் எத்தனை வருடங்களுக்கு நிலைக்கும்? ஆங்கில மொழிப்பயிற்சி இல்லாத இன்றைய இளைஞர் ஆங்கில மொழியைக் கற்று ஆங்கிலத்தில் தொடர்புகொள்ளக் கூடிய அளவிற்கு வளர்வார்களா? அல்லது இன்னும்எத்தனை வருடங்களுக்கு ஆங்கிலம் எமது இணைப்பு மொழியாக இருக்கப்போகின்றன? ஆங்கிலம் எமது நிர்வாக மொழியாகநீடித்து நிலைக்காது எபதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்

இச்சந்தர்ப்பத்தில் மத்திய அரசாங்கத்துடன் எந்த மொழியில் தொடர்பு கொள்ளவேண்டும்? யாகத் தமிழும் உபயோகிக்கலாம்.

எனவேதான், தமிழில் எழுதப்படும் கடிதங்கங்கு சிங்களமொழி பெயர்ப்பு இணைக்கப்பட வேண்டும் என்றேன்.

இச்சந்தர்ப்பத்தில், பலருமறிய நான் ஒன்றினைக் கூறவேண்டும். ஏதாவது உள்ளூர் ஆட்சி மன்றத்திலிருந்து மாநகர சபை முதல் வடுக்கு எழுதப்பட்ட சிங்களக் கடிதத்திற்கு, தமிழ் பெயர்ப்பு இணைக்கப்பட்டிருப்பதை [ஆங்கில மொழி பெயர்ப்பு இல்லை] நான் கண்ணுரக் கண்டேன்.

### பழம்பெருமைக்குஒவ்வ நடந்தால் என்ன?

நாம் தமிழர் தமிழனின் பழம் பெரும் பெருமையை வாயார வாழ்த்திப் பெருமைப்படுகின்றேம். தமிழர்களின் குணம், பண்பு, பெருந்தகமை முதலிய வற்றிற்கு அமைய நாம் அவற்றிற்கு அமைய நாம் அவற்றிற்கு இணங்க வாழ்ந்தாலென்ன?

பெருந்தன்மையுடன் எமது பிரதிநிதிகள் பகிரங்கமாகச் சிங்கள மக்களிடமும் சிங்களத் தலைவர்களிடமும் கூறினுல் என்ன? எமக்கு ஆங்கிலம் வேண்டாம்; சிங்களத்தில் நிர்வகிக்கும் பொழுது, தமிழில் (ஆங்கிலத்தில் அல்ல) மொழி பெயர்ப்பு இணைக்கவும்; நாம் சிங்களத்திற்கு மாறில்லை ஆனுல் தமிழும் வேண்டும் என்றே கூறுகின்றேம். என மொழிப் பிரச்சனையைத் தீர்க்க வழிவகுப்பதற்காகவே, வழிகாட்டுவதற்காகவே இப் பிரேரணையை நான் மாநகர சபையில் பிரேரித்தேன்

## ஏற்பு வலியின் மூலகாரணம்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

''காலில் ஏற்படும் வெட்டுக் காயங்களுடன் குதிரைச் சாணத்தை மிதிப்பதால் அதிலுள்ள கிருமிகள் உடலில் புகுந்து ஏற்புவலியை உண்டாக்குகின்றது. இதற்கு குதிரையிலிருந்தே தடை மருந்து எடுக்கப்பட்டு வருகிறது. ஏதாவதொடு காயம் ஏற்பட்ட நாளிலிருந்து ஒன்றரை வருடம்வரை ஏற்பு வலி ஏற்படும்''

இவ்வாறு டாக்டர் ஆர். நல்லையா உடும்பராய் இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

செல்வன் எஸ். இந்திரராஜாவின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. செல்வன் எஸ்.மகேந்திரன் நன்றி கூறிஞர்.

## 'தமிழுக்கு தொண்டாற்றியவர்'

தெல்லிப்பழை, சனி

தமிழ் நாட்டில் பிறந்து தமிழர்களுக்கும் தமிழுக்கும் அதிக தொண்டுகள் செய்த அறிஞர் அண்ணு பலதமிழ் நூல்களை எழுதிஞர். தமிழன் தன்மானத்துடன் வாழ வழி அமைத்தார் என சுன்னுகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்டஅமரர் அண்ணு நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உடுவில் எம்.பி. திரு.வி. தருமலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சி. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செனட்டர் திரு. சு.நடராசா. ஆசிரியர் நாவேந்தன் திருவாளர்கள் வ.நடராசா, எஸ். அருளானந்தம், சி. அப்புத்துரை உட்பட பலர் உரையாற்றினர்.

நிலையத் தலைவர் திரு. க. செல்வநாயகம் நன்றி கூறிஞர். திரு அண்ணுதுரைக்கு இரண்டு மிநிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம்

# இலங்கை அரசாங்கத்தின் உண்மை நோக்கமென்ன?

1964-ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கையிலுள்ள நாடற்ற இந்தியவம்சாவழியினரின் பிரச்னைகளை தீர்க்கும் நோக்கத்துடனேயே கைச்சாத்துடப்பட்டது. ஆனுல் இன்று அவ்வொப்பந்தம் செயல்படும்

யற்றதொன்றுகும். 1949-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை நோக்கும்பொழுது அங்கு பிரஜாவுரிமை, ஒருவர்அங்கு வாழ்ந்த காலத்தையடிப்படையாக வைத்து வழங்கப்பட்டது. இந்த முறைநியாய

## பேராசிரியருக்கு அஞ்சலி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இலங்கைச் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் விசேஷ கூட்டத்தில் காலஞ்சென்ற கணிதப் பேராசிரியர் திரு. குலசேகரத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி செலுத்திப் பேசிய மன்றத் தலைவர் திரு. ஆறுமுகம் ஜெகதீசன் கணிதப் பேராசிரியரின் இழப்பு தமிழ் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பெனக்குறிப்பிட்டு அவரின் கணிதப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் அவர் பணியாற்றிய சர்வகலாசாலைக்குப் பேருதவியாக வுள்ளன எனத் தெரிவித்தார்.

## நாளை கார் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினத்திற்கு அத்தொகுதி மக்களால் கார் ஒன்று அன்பளிப்புச் செய்யப்படவிருக்கின்றது. இதற்கான அன்பளிப்புக் கூட்டமொன்று 3-ம் திகதி வேலணை வங்களாவடியில் நடைபெறவிருக்கின்றது.

திரு. ரி. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் வேலணை கிராமசபைத் தலைவர், மற்றும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொள்ளுவார்கள். (ந. நி)

## ஸ்ரீ முருகதாஸ் நிகழ்ச்சிகள்

நாவலப்பிட்டி, சனி

பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் கோஷ்டியினரின் கச்சேரி நிகழ்ச்சிகள் 6-ம்திகதி உடுவிலிலும் 7-ம்திகதி சாவகச்சேரியிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன 8-ம் திகதி சுவாமிகள் தாயகம் திரும்புவார்.

## தற்காலிக வேலை நீக்கம்

அராலி, சனி

வலி. மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாச லொறிச் சாரதி ஒருவர் அச்சமாச உத்தியோகத்தர் ஒருவரை ஏசியதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை பரிசிலனை செய்த் சமாச நிர்வாகசபை, சாரதியை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்துள்ளது.

(8-ம்கலத் தொடர்ச்சி)

அழைக்க முன்வரவேண்டியது அவசியமாகும். இப்படிச் செய்வதில் யாருக்கு என்ன நஷ்டம்.

0 0 0

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே விடுகாலி மாடுகளின் தொல்லை அதிகமாகியுள்ளதாம். ஓர் அன்பர் தமது வயலில் அறுவடை செய்ய இன்று ஏற்பாடு செய்திருந்ததாயும் ஆனுல் நேற்றிரவே பல மாடுகள் வந்து, எல்லாக்கதிர்களையும் தின்றுவிட்டதாயும், காலையில் சென்று பார்க்கும் போது வயிற்றெரிச்சலாக இருந்ததாகவும் மிக ஆத்திரத்துடன் தெரிவிக்கிறுர்.

மழை உரிய காலத்தில்இல்லாததால்இம்முறை இப்பகுதியில் நெல் சாகுபடிமிகவும் குறைவு. விளைந்த நிலத்திலும், இப்படி மாடுகளை சிலர் அவிழ்த்து விட்டு மேயச்செய்வதாயின் அது இரட்டிப்பு பாதகச் செயலாகும். நிலமனைத்துக்கும் வேலி கட்டவோ, இரவு பகல்காவல் போடவோ முடியாது. ஆகவே கால்நடைகளைவைத்துள்ளவர்கள் கண்டபடி அவற்றை அவிழ்த்துவிடாமல், காவலுடன்மேய்க்கவிட வேண்டும். மக்களுக்கான உணவை இக் காலத்தில் இப்படி நாசமாக்கும் குற்றத்துக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்.

0 0 0

இதே சமயம் இப் பகுதியால் கால்நடைகளுக்கு பொது மேய்ச்சல் நிலங்கள் அநேகமாக இல்லை. தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடைகளுக்காக சில மேய்ச்சல் நிலங்களை ஒதுக்கி இருப்பர் இக் காலத்தில் கால்நடைகளைக் கொன்று தின்றுவிட்டுடிராக்டர்களை இறக்குமதி செய்து அவற்றை நம்பியே கமம் செய்வதாயும், இதனுல் பல தீமைகள் ஏற்படுவதாயும், ஓரன்பர் தெரிவிக்கிறுர். டிராக்டர்களுக்கு அதிக வாடகை செலுத்த வேண்டியுள்ளதாயும் களிமண் சேறு அதிகமுள்ள நிலங்களில், டிராக்டர்கள் சிக்கி வேலை செய்ய முடியாதிருப்பதாயும், கால்நடைகள் அவசியம் தேவைப்படுவதாயும் கிளிநொச்சியில்ஒருவிவசாய அன்பர் தெரிவித்தார். மாடுகளுக்கு வைக்கோல் உணவாகப்பயன்படுகிறதென்றுலும், ஒவ்வொரு ஊரிலும் கால்நடைகளுக்காக மேய்ச்சல் நிலம் ஓரளவாவது ஒதுக்குவது, மக்களின் நன்மைக்கே அவசியமாகும். உள்ளூர் ஆட்சி மன்றங்கள் இதைக் கவனிக்குமா?

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஸபையிலே வெளியிலோ ஒரு தமிழ்த்தலைவரும் முன்வராதது பெரிய துரதிருஷ்டம். தமிழுக்கு உரிய இடம் வேண்டுமென்பதில் தமிழ்பேசும் மக்களே அலட்சியமாக இருப்பின், அம்மொழியின், அந்த இனத்தின் கதி என்ன ஆகுமென்பதை விளக்கத்தேவையில்லே.

ஆங்கிலத்தில் பேசிவிட்டதால் சிங்களவரல்லாத மக்

பரந்தநோக்கத்துடனும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலமே வழிகாட்டச் செய்வதாயின், அவரே இந்நாட்டில் சமாதானத்தையும் செல்வத்தையும் பெருக்க உதவியவராவார். தேசிய ஒற்றுமையையும் தமிழ் இனத்தின் ஆதரவையும் விரும்பும் எந்தக் கட்சியினரும் இந்த யோசனையை எதிர்க்கத் துணியமாட்டார்கள்.

## ஒரு நல்ல யோசனே

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இம்மாதக் கடைசியில் ஒரு வரையறுக்கப்பட்ட லிமிட்டெட் கம்பெனியாக மாறி கைத்தொழில் வர்த்தக முதலியவற்றில் ஈடுபட்டு தொழிலாளருக்கு உதவப் போவதாக தலைவர் திரு தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நாட்டிலே 80 சத வர்த்தகமும் கட்டடங்களும் தொழிற் சங்கங்களுக்கே சொந்தமாம். மலேஷியாவில் சென்ற மாதம் ஒரு தொழிற் சங்கம் 2000 ஏக்கருள்ள தோட்டத்தை வாங்கி நடத்துவதாயும் ஏற்கெனவே பல தோட்டங்களை அங்குள்ள தொழிலாளர் சங்கம் லாபகரமாக நடத்துவதாகவும் கூறப்படுகிறது. இலங்கையிலும் இ. தொ. கா. பல வருடங்களுக்கு முன்பே இவ்வித ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டிருப்பின் மலைநாட்டுத் தொழிலாளருக்கு பெரு நன்மைசெய்திருக்கக்கூடும்.

இத்திட்டத்தின் தேயிலே ரப்பர் முதலிய பொருள்களுக்கு உலகில் போட்டி அதிகரித்து விலையுகுறைவதால், லட்சக்கணக்கான எளிய தொழிலாளரின் எதிர்காலம் ஆபத்திலுள்ளது. இதைத் தவிர்த்து, அவர்களுக்கு வேலைகளையும், அத்தியாவசிய தேவைகளையும், அரசாங்கத்தை எதிர்பாராமல் அவர்களே செய்துகொள்ளும் எந்த முயற்சியும் பலனிதருவதாகும் வரவேற்கத்தக்கதாகும். இ. தொ. கா. இவ்வகையில் நல்ல முன்மாதிரி காட்டினல் மற்றத் தொழிற்சங்கங்களும் அதைப் பின்பற்றவும், நாட்டில் வேலையில்லாக் கஷ்டம் குறையவும் கூடும்.

## மரண அறிவித்தல்

### சி. சேதுப்பிள்ளை

திருநெல்வேலி வடக்கு மலையாளம் புகையிலை வியாபாரி சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியாரும், பத்மநாதன் இலங்கை வங்கி கொழும்பு, கணேசமூர்த்திநாதன் லண்டன், திருமதி புவனேஸ்வரி இரத்தினதுரை, திருமதி சத்தியபாலேஸ்வரி செல்லத்துரை, ஆசிரியை திருமதி சரஸ்வதி செல்வரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. இரத்தினதுரை மின்சார இலாகா யாழ்ப்பாணம், தலைமையாசிரியர் திரு. சி. செல்லத்துரை, ஆசிரியை சரஸ்வதி பத்மநாதன், ஆசிரியர் திரு. செ. செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாருமாகிய சேதுப்பிள்ளை 1-3-69 பிற்பகல் சிவபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக 2-3-69 ஞாயிறு பிற்பகல் நம்பர் 1, குமாரவீதியிலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 795

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது

வந்தேன் என ஆரம்பத்தில் வற்புறுத்துகின்றேன்.

### நகரத்தின் நிர்வாகம்

யாழ்ப்பாணம் தமிழ் பேசும் பிரதேசத்தில் உண்டு என்றதனுலும், இந்நகரத்தில் வாழ்கின்றவர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பேசும் மக்களாக இருப்பதினுலும் எமது நகரத்தின் நிர்வாகம் தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும். நாம் மொழி உரிமைக்காகப் போராடும்பொழுது. நகரத்தில்அல்லதுநாட்டில் வாழும் மக்கள் எந்தமொழியை அல்லது மொழிகளைப் பேசுகின்ருர்களோ அந்த மொழி அல்லது மொழிகளின் மூலம் அரசாளப்படவேண்டும் என்ற அடிப்படை உரிமையினை ஆதாரமாக வைத்தே கோருகின்ருேம். இக்கோரிக்கை நியாயமானது மட்டுமன்றி நீதியுமானது.

இருப்பினும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் எம்மீது திணிக்கப்பட்ட ஆங்கில மொழியிலேயே எமது நகரத்தின் நிர்வாகம் மட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் நிர்வாகமும் நடக்கின்றது. நிர்வாகம் எனக்கூறும்பொழுது எமக்கு எழுதப்படும் கடிதங்கள் தமிழில் இருத்தல்வேண்டும் என்பதனைக் குறிக்கவில்லை. நிர்வாகம் என்ருல், நகராட்சிமன்றத்தின் சகல நிர்வாக வேலைகளையும் அதில் கடமையாற்றும் ஊழியர் தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும் என்பதனையே குறிக்கின்றது. ஆகவேதான் எனது பிரேரணையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆங்கிலம் உபயோகிக்கப்படாது எனக் குறிப்பிட்டேன்.

### ஆங்கிலம் எதற்காக

ஆங்கிலம் சிறந்த ஒரு மொழி. அதனைக் கற்பதனுல் எமக்குப் பயனுண்டு; நாம் எமது அறிவை வளர்த்திடலாம். ஆனுல் இச்காரணத்தினுல், எதற்காக ஆங்கிலத்தில் மோகம்கொள்ள வேண்டும்? அல்லது எதற்காக அதற்கு அடிமைப்பட வேண்டும்?

மேலும், நாம் இன்னுமோர்பிரச்னையை மனத்தில் எடுத்துக்கொள்ளவழியில்லை அதாவது தாய்மொழிமூலம் கல்வித்திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, ஏறக்குறைய 5-10 சத விகிதத்தவரே ஆங்கிலம் கற்றிருந்தனர். இதனுல் இவர்களில் ஒரு பகுதியினரே எம்மை அரசாண்டனர். அரசாங்கத்துக்கு உதவியாகவும் இருந்தனர். ஆனுல்

மொழியாக இருக்கப்போகின்றன? ஆங்கிலம் எமது நிர்வாக மொழியாகநீடித்து நிலைக்காது எ பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்

இச்சந்தர்ப்பத்தில், மத்திய அரசாங்கத்துடன்எந்த மொழியில் தொடர்பு கொள்ளவேண்டும்?

அடிப்படைமொழிஉரிமையில் இன்னுமோர் அம்சம் உண்டு. அதன் பிரகாரம் ஒருபிரஜை தன் மொழி மூலம் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும். அத்துடன் அரசாங்கமும் அம்மொழியிலேயே பதில் அளிக்கவேண்டும்.

இவ் வடிப்படையிலிருந்து நோக்கும்பொழுது எமது சபை தமிழ்மொழியிலேயே தொடர்புகொள்ள வேண்டும் என்பது வெள்ளிடைமலே.

### சிங்களமொழிபெயர்ப்பு எதற்கு

இன்றைய அரசியல் நிலையிலே — நம் நாட்டிலுள்ள வகுப்புவாதிகள் கிழப்பிய சூழ்நிலையைக் கருதவில்லை. ஆனுல் பாராளுமன்றம் இற்றைவரை அங்கீகரித்துள்ள மொழிச்சட்டங்கள் கிழப்பியுள்ள சூழ்நிலையிலே நாம் ஆங்கிலத்தில் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளாமல் தமிழில் தொடர்பு கொள்வதாயின், சிங்கள மொழி பெயர்ப்பும் அவசியம்.

இச்சந்தர்ப்பத்திலே, மத்திய அரசாங்கம் எம்முடன் தொடர்பு கொள்ளும் பொழுது சிங்களத்தில் மட்டுமே தொடர்பு கொள்கின்றது எனக் குறை கூறுவது தவறு. குறை கூறவும் இயலாது. காரணம், இன்றைய அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்து, அதனை ஆட்சி பீடத்தில் ஏற்றிய பின்னர், நம் பிரதமரான திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள், ''சிங்களம் மட்டும் சட்டத்தை நாடு பூராகவும் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் அமுல் நடத்தியுள்ளேன்'' எனப் பெருமிதத்துடன் கூறிய பொழுது எந்த விதமான எதிர்ப்பையும் அல்லது ஆட்சேபத்தையும் தமிழ்ப் பேசும் மக்களது பிரதிநிதிகள் இருக்கும் சட்சிகளான தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகள் தெரிவிக்கவில்லை. இதனுல் எமது விருப்பு வெறுப்பின்றி, சிங்களம் நம் நாட்டின் அரசகரும மொழி.

இது இவ்வாறிருக்க, நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் அமுல் நடத்தப்படுமாயின், அதாவது அச் சட்டத்தின் விதிகட்கமைய அரசாங்கம் சுற்று நிருபத்தை அனுப்புமாயின், சட்ட ரீதி

1964-ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கையிலுள்ள நாடற்ற இந்தியவம்சாவழியினரின் பிரச்னைகளை தீர்க்கும் நோக்கத்துடனேயே கைச்சாத்திடப்பட்டது. ஆனுல் இன்று அவ்வொப்பந்தம் செயல்படும் பொழுது எந்த நோக்கத்துடனே அது ஏற்படுத்தப் பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படாதது வருத்தத்தைக் கொடுக்கிறது. 1968-ம் ஆண்டு மே மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பொழுது தோட்டப்பகுதிகளில்லாத மக்களே விண்ணப்பிப்பதில் அக்கறை காட்டியுள்ளமை தெரியவந்தது. 1949ம் ஆண்டு சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமை பெற்றவர்களும், பெருதவர்களும் அதாவது தோட்டத்தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்தே இந்தியா திரும்ப விரும்புகின்றனரேயொழிய ஒருபகுதியினர்சிறுபான்மையினராகப் பாதுகாப்பின்றி இலங்கையில் தங்க விரும்பவில்லை. இத்தகைய ஒரு நிலைமையை இலங்கை அதிகாரிகள், தோட்ட அதிபர்கள், தோட்டதொழிலாளர் சங்கம் ஆகியன விரும்பவில்லை. இவர்கள்இந்தியவம்சாவழியினர் சென்றுவிட்டால் உள்நாட்டுத் தொழிலாளர்களைக் கொண்டே வேலை செய்விக்க நேர்வதுடன் தோட்டங்கள் லாபம்தரும் ஸ்தாபனங்களாக இல்லாது போகலாம் என்றும் கருதுகின்ருர்கள். இது பான்றபல கருத்துக்களை நோக்கும்போதும் இன்று இவ்வொப்பந்தத்தின்படியின்றி செயல்படும் நடைமுறைகளைக் கவனிக்கும்பொழுதும் இந்த ஒப்பந்தத்தை நீக்கிவிடுவதே ஒரேயொரு வழியேதவிர வேறு வழியில்லையெனலாம். ஆனுல் இவ்வொப்பந்தத்தில் 3 லட்சம் பேருக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனுல் இன்று இதுகால வரைக்கும் 250 பேருக்கே இலங்கை அரசாங்கம் இலங்கைப் பிரஜாவுரிமையைக் கொடுத்துள்ளது இதற்குக் காரணம் விண்ணப்பங்கள் குறைவாகக் கோரப்பட்டதல்ல. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விதிகளேயாம். அரசாங்கம் விவாகத்தைஒரு காரணமாக வைத்து அதாவது இலங்கையரை மணம் புரிந்தவர்களுக்கு முதலில் பிரஜாவுரிமை கொடுக்கிறது இவ்வாறு பல கட்டுப்பாட்டு விதிகளைக் கொண்டுவந்து அதன்படி பிரஜாவுரிமை வழங்குவதில் முட்டுக்கட்டைகளை விதிப்பது நேர்மை

யற்றதொன்ருகும். 1949-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை நோக்கும்பொழுது அங்கு பிரஜாவுரிமை, ஒருவர்அங்கு வாழ்ந்த காலத்தையடிப்படையாக வைத்து வழங்கப்பட்டது. இந்த முறைநியாயமானது. ஆனுல் இலங்கையரை மணந்தவருக்கே முதலில் பிரஜாவுரிமை யென்ற விதி நியாயமற்றதொன்ருகும். அதற்காக வேறு சட்டம் ஏற்கனவே இருக்கின்றது.

இப்பிரஜாவுரிமை விடயமாக இந்தியஅரசாங்கத்தை பொறுத்தஅளவில் இவ்வித நியாயமின்மைகளைக் காணவியலாது. 1949-ம்ஆண்டில் இலங்கையில் இருந்ததாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட இதுகாலவரை பிரயாணத்துக்கான தஸ்தாவேஜுகளை பெருத எல்லா விண்ணப்பதாரிகளையும் இந்திய அரசாங்கம் இந்திய பிரஜைகளாகப் பதிவுசெய்துள்ளது. இப்பதிவுக்குஇலங்கையைப்போல் அவர்கள் ஒரு கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை' இந்திய அரசாங்கத்தின் இத்தகைய தயாளமனப்பான்மையினுல் இதுவரை ஏறக்குறைய 33000 பேர் இந்தியப் பிரஜைகளாகப் பதியப்பட்டுள்ளனர்.

எப்படியிருப்பினும் இதில் ஈடுபடுகிறவர்களுக்கு முதலில் செலவுக்கென ரூபா 1000 வரை ஒதுக்கி வைக்க வேண்டியிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்கள் பிரஜாவுரிமை குறித்து விண்ணப்பிக்க கண்டியிலுள்ள இந்திய உதவி தூதுவர் காரியாலயமே ஒரேயொரு இடமாக அமைந்துள்ளது. இது நாடெங்கும்முள்ள இந்திய வம்சாவழியினருக்கும் வசதியாக வமைதாதலால் கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் காரியாலயத்திலோ அல்லது வேறு இடத்திலோ இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

இந்திய தூதர் உண்மையாக நாடற்றவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க நோக்கம் கொண்டால் தனது ஊழியர்களைத் தோட்டப்பகுதிகளுக்குஅனுப்பி பாஸ்போட் முதலிய பிரயாணச் சீட்டுக்களை வழங்க வேண்டிய விபரங்களையும் சேகரிக்கவேண்டும். இவ்வாறு செய்யின் குறுகிய கால எல்லைக்குள் 5 லட்சத்துக்கு மேலான இந்திய வம்சாவழியினர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டு விடுவார்கள். இலங்கை அரசாங்கம் நாடற்றவர் பலருக்கு பிரஜாவுரிமை கொடுத்து இந்திய அரசாங்கத்தோடு ஒத்துழைத்தாலன்றி இந்திய அதிகாரிகள் பதிவு வேலைகளைத் துரிதமாகச் செய்வார்கள் என எதிர்ப்பாக்கவியலாது.

இலங்கையரசாங்கத்தின் பல கட்டுப்பாடுகளால் தற்பொழுது இந்திய அரசாங்கம் இப்பதிவு வேலைகளைத் துரிதமின்றிச் செய்து வருகிறது. இதனுல் இன்னும் சில மாதங்கழுக்குப் பின்னர் இப்பிரஜாவுரிமைப் பதிவு இருக்கமாட்டாதெனநம்பப்படுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேநல்லுறவை விரும்புவோர் இந்த ஒப்பந்தம் குலையாமல் கவனிப்பதோடு இலங்கைஅரசாங்கம் பிரஜாவுரிமை வழங்குவதற்கு இலங்கையரைத் திருமணம் செய்திருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடுகளையெல்லாம் ஏன் விதிக்கிறது எனவும் கேட்க வேண்டும். ஒப்பந்தத்தின்படி 3 லட்சம் பேர்க்ளுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படுவதாகவிருந்தும் அவ்வாறு வழங்காமல் இந்தியா திருப்பவேண்டிய 5 லட்சத்துக்குமதிகமானவர்களின் பிரயாணத்தைத் தடைப்படுத்துவதேன்?

இலங்கை அதிகாரிகள் இத்தோட்டத் தொழிலாளர்கள் வெளியேறுவதை நாடு தாங்காது என்று இலங்கை அதிகாரிகள் கருதினுல் அதை ஏன் நேர்மையாக வெளியிடமுடியாது? இதைப் பொறுத்த அளவில் அங்கு செய்ய வேண்டியதென்னவெனில் இலங்கையில் வசிக்கவிரும்பும் நாடற்றயாவருக்கும் பிரஜாவுரிமை வழங்கவேண்டும். ஆனுல் தி. மு. க. உணர்வு பெற்ற இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் தமது தாயகத்துக்குத் திரும்புவதை இந்த கட்டத்தில் தடுத்து நிறுத்திவிடலாம் என்பது சந்தேகம் தான்.

எம். சங்காரம்.

கொழும்பு.

நியை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்துள்ளது.

(8-ம்கலத் தொடர்ச்சி)

அழைக்க முன்வரவேண்டியது அவசியமாகும். இப்படிச் செய்வதில் யாருக்கு என்ன நஷ்டம்.

0 0 0

ஆதியாய நான்முகனும்
மாலுமறிவரிய
சோதியானேநீதியில்லேன்
சொல்லுவன் நின்திறமே
ஓதிநாளும் உன்னையேத்
தும் என்னைவினை அவலம்
வாதியாமே வந்துநல்காய்
வலிவலமே யவனே
—அப்பர்அடிகள்

ஒவ்வொரு ஊரிலும் கால் நடைகளுக்காக மேய்ச்சல் நிலம் ஓரளவாவது ஒதுக்குவது, மக்களின் நன்மைக்கே அவசியமாகும். உள்ளூர் ஆட்சி மன்றங்கள் இதைக் கவனிக்குமா?

0 0 0

இந்தியாவிலிருந்து முதல் தரமான கதக் நாட்டியக் கோஷ்டியினர் இலங்கைக்கு வந்து, கொழும்பு, அனுராதபுரம், கண்டி. முதலிய நகரங்களில் நடனமாடுவதாயும், 6-ந்திகதிஇந்தியா திரும்புவதாயும் ஒரு செய்தி கூறுகிறது. இலங்கை அரசின் கலாசாரப் பகுதியின் ஆதரவில் தான் இந்த நடனங்கள் நட கின்றனவாம். ஆனுல் பிரவேச கட்டணங்கள் ரூபா 2 முதல் ஏழரை ரூபாய் வரை என்று அறிவித்துள்ளனர். இவ்வித கலை நிகழ்ச்சிகளை, அதுவும் அரசாங்கஆதரவில் நடப்பவைகளை இலவசமாக நடத்த முடியாதா?

அது எப்படியானுலும், வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஏன் கலாசாரப்பகுதியினர் புறக்கணித்துள்ளனர். இப்பகுதிக்கு இந்த நிகழ்ச்சிகளை ஏன் ஒழுங்குசெய்யவில்லை. இங்குள்ள பிரதேச கலாமன்றம் தூங்குகிறதா? இனியாவது தமிழ்ப்பகுதிகளை புறக்கணிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றே இதை எழுதுகிறேன்.

0 0 0

திருப்பெருந்துறை அதாவது திருக்கேதீச்சர ஆலய அலங்கார உற்சவ விழாபற்றிய அறிக்கையையும் அங்கு புது வருடத்தில் நடக்கவிருக்கும் உற்சவ விவரங்களுமடங்கிய பிரசுரத்தையும் திருக்கேதீச்சர தேவஸ்தானத்தார்அச்சடித்து அனுப்பியுள்ளதைப்பார்த்தேன்.

அவர்கள் திருப்பெருந்துறைஎனும் சொல்லைப்பாவிக்கவில்லை.ஏன் இதில் தயங்க வேண்டும்? முதலியார். ராஜ நாயகமவர்கள் எழுதியுள்ள 'யாழ்ப்பாண சரித்திரம்' எனும் நூலில் திருக்கேதீச்சரமே திருப்பெருந்துறை என்பதை வலியுறுத்திக் காட்டி, தமிழ் நாட்டிலுள்ளவர்கள் இதை ஏற்க மறுக்கிருர்களே என்றுவருத்தம் தெரிவித்துள்ளார்.

ஈழத்திலுள்ளவர்களே இதை திருப்பெருந்துறை என்று கூறத்தயங்குகையில் தமிழகத்திலுள்ளவர்களை எப்படி இதை ஒப்புக் கொள்ளச் செய்யமுடியும்? திருப்பணி சபையாரும் தேவஸ்தானத்தாரும் ஈழத்திலுள்ள சைவசமய ஸ்தலங்களும் திருப்பெருந்துறை என்றேதிருக்கேதீச்சரத்தை

(7-ம் கலம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org